உ

சிவமயம்.

சிவதோத்திரப் பாடல்

உரையுடனும்

விநாயகர் அகவலும்.

தேவாரம்:-	பாசுரங்கள்
திருஞானசம்பந்தமூர்த்தி நாயனர்	10
திருநாவுக்கரசு நாயனர் ...	10
ஸ்ரீ சுந்தரமூர்த்தி நாயனர் ...	10
திருவாசகம் (ஸ்ரீமாணிக்கவாசகசுவாமிகள்)	10
திருவிசைப்பா	2
திருப்பல்லாண்டு	1
பெரிய புராணம்	3
சைவசமயகுரவர் துதி	1
திருக்கூட்டத்தார் துதி	1
திருப்புகழ்	2
மீனுக்ஷியம்மை பிள்ளைத்தமிழ் ...	2
தாயுமானவர்	1
சிவஞான சுவாமிகள் துதி ...	1
திருமந்திரம்	1
ஆகப்பாடல்கள்	55

உ

சிவமயம்.

பதிப்புரை.

அம்பாசமுத்திரம் வழக்கறிஞர் உயர்திரு. K. A. சிவஞானம் பிள்ளையவர்களின் ஆணைபெற்று சிவதோத்திரப்பாடலாகிய இதனை சென்ற சூலை மாதத்தில் ஆயிரம் பிரதிகள் பதிப்பித்துள்ளேன். பல அன்பர்களும் பள்ளிக்கூட மாணவர்களும் அவாவுடன் படிக்க முன்வந்தமையால் முன் பதிப்பித்த பிரதிகள் விரைவில் செலவாகி விட்டன. ஆதலின் மீண்டும் இப்பொழுது பதிப்பித்துள்ளேன். இப்பதிப்பில் "திரு அங்கமாலையும்" சேர்க்கப்பெற்றிருக்கின்றது. அன்பர்கள் ஒவ்வொருவரும் இதனை வாங்கிப் படிப்பதுடன் தங்கள் குழந்தைகளையும் படிக்கும்படிசெய்து இறைவன் திருவருளுக்குப் பாத்திரராவார்களாக.

தூத்துக்குடி,
23—8—40

அடியார்க்கு அடியன்,
சங்கரையா.

சைவப்பிரகாசம் பிரஸ், தூத்துக்குடி.

முகவுரை.

முதற் பதிப்பு:—

செந்தமிழ்ப் பேராசிரியராம் அகத்தியமாமுனிவரது இருப்பிடமாகிய பொதியைமலையைச் சார்ந்ததாய்க், காட்சிக்கினிய மலைவளம் செழித்தோங்கியதாய்க், கடல் மட்டத்திற்குமேல் 4800 அடி உயர்ந்ததாயுள்ள கன்னிகட்டி என்னும் கோடைவாசஸ்தலத்தில், சென்னை சட்டகலாசாலைப் போதகாசிரியர் ஸ்ரீமான் K சுப்பிரமணிய பிள்ளை அவர்கள் M. A., M. L., அன்பீடாக சில சைவ நண்பர்களும்* யானும் உடனிருந்தகாலை எனது வேண்டுகோளுக்கிணங்கி ஷை பிள்ளையவர்கள் இப்புத்தகத்துள்ள திருப்பாசுரங்களை ஆய்ந்து கோவை செய்தார்கள். தமிழ் நாட்டிலே தேவார திருவாசக முதலிய திருவருட் பிரபந்தக் கல்வி தற்சமயம் மிகவும் குன்றியிருப்பதைக் கருதி அவ்வாராய்ச்சியைப் பரவச்செய்யும் நன்னோக்கத்தை உள்ளத்துட்கொண்டு இத்திருப்பாசுரத்திரட்டை அச்சிடலாயினேன்.

இதிற்கண்ட 51 செய்யுட்களையும் மனனஞ் செய்யும் சிறுவர் சிறுமியர்கள் பரிசோதனையின் பேரில் ரூபாய் 3க்கு குறையாத விலையுள்ள தமிழ்ப் புத்தகமொன்று பரிசளிக்கப்பெறுவார்கள்.

அம்பாசமுத்திரம்,
23—5—21

K. A. சிவஞானம் பிள்ளை,
வக்கீல்.

---

* ஸ்ரீ நாகப்பசுவாமி அவர்கள் ஸ்ரீமான் O. Sv. இராமனுத பிள்ளை
ஸ்ரீமான் T. P. நெல்லைநாயகம் பிள்ளை அவர்கள் ,, V. K. குஞ்சிதபாதம் பிள்ளை
,, V. S. நடராஜ பிள்ளை
,, V. S. ஆறுமுகம் பிள்ளை ,, ,, K. S. அனந்தகிருஷ்ணன்
,, நெல்லையப்ப பிள்ளை ,,

பின் பதிப்புக்கள் :—

1923ம்௵ 750 பிரதிகள் அச்சிட்டு இனமாகக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. 1வது பதிப்பு முகவுரையிற்கண்டபடி இந்நூலிற்கண்ட 51 செய்யுட்களையும் பாராயணஞ்செய்த சிறுவர் சிறுமியர்களுக்கு ரூ. 76 வரை செலவு செய்து அகத்தியர் தேவாரத்திரட்டு, பெரிய புராணவசனம் முதலிய புத்தகங்கள் பரிசு கொடுக்கப்பட்டன

3. பின் 1925ம்௵ மூன்றும் பதிப்பாக 1000 பிரதிகள் அச்சிட்டு இனமாக கொடுக்கப்பட்டன.

4. பின் 1926௵ நான்காம் பதிப்பாக 4 செய்யுட்கள் கூடச் சேர்த்து 55 செய்யுட்களாக 1000 பிரதிகள் அச்சிட்டு இனமாகக் கொடுக்கப்பட்டன.

5. இப்பதிப்பில் "சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார், செல்வர் சிவபுரத்தினுள்ளார் சிவனடிக்கீழ்" என்ற பெரியார் வாக்கின்படி எல்லோரும் பொருளை நன்குணர்ந்து ஓத வேண்டுமென்று அடியேனுக்கு ஆசை உண்டாக அவ்வண்ணமே சில பெரியோர்களைக்கொண்டு பதவுரை எழுதுவித்து அச்சிட்டுள்ளேன். குற்றங் குறையிருப்பின் அறிவிக்கும்படி பெரியோர்களைத் தாழ்மையாகப் பிரார்த்திக்கிறேன்.

அம்பாசமுத்திரம்,
1—10—1935.

K. A. சிவஞானம் பிள்ளை,
வக்கீல்.

உ

கணபதி துணை.

விநாயகர் அகவல்.

வரலாறு.

சுந்தரமூர்த்தி நாயனருடனே கைலாயத்துக்குப் பரமசிவனுடைய சன்னிதானத்தில் ஞானஉலா அரங்கேற்ற எழுந்தருளுகின்ற சேரமான்பெருமாணயனர் 'ஔவை யாரை அழையாமல் வந்து விட்டோமே' என்று நினைத்தார். அது விநாயகரைப் பூசித்துக்கொண்டிருந்த ஔவையாருக் குத் தெரிந்து தானும் அவர்களுடனேகூட கைலாயத்துக்குப் போகவேண்டுமென்கிற விருப்பங்கொண்டு துரிதமாகப் பூசை செய்தாள். விநாயகர், "ஔவையே! நீ சாவதானமாகப் பூசை செய்; நீ அவர்களுக்கு முன்னதாகவே போய்ச் சேரும் படி செய்கிறேன்" என்றார். அப்படியே அவள் துரிதமில் லாமற் பூசை செய்து இந்த அகவலைத் தோத்திரமாகப் பாடினாள். அப்போது விநாயகர் தாம் சொன்னபடி ஔவை யாரைக் கைலாயத்திற் சேர்த்தார்.

பின்பு வந்த சேரமான்பெருமாணயனரைப் பார்த்து ஔவையார் சொன்ன கட்டளைக் கலித்துறை:—

மதுரமொழி நல்லுமையாள்
புதல்வன் மலர்ப்பதத்தை
முதிரநினையவல் லார்க்கரிதோ
முகின்போன் முழங்கி
யதிரநடந்திடும் யானையுந்தேரு
மதன்பின் வருங்
குதிரையுங்காதங் கிழவியுங்காதங்
குல மன்னனே.

உ

கணபதி துணை.

விநாயகர் அகவல்.

சீதக்களபச் செந்தாமரைப்பூம்
பாதச்சிலம்பு பலவிசைபாடப்
பொன்னரைஞாணும் பூந்துகிலாடையும்
வன்னமருங்கில் வளர்ந்தழகெறிப்பப்
பேழைவயிறும் பெரும்பாரக்கோடும்
வேழமுகமும் விளங்குசிந்தூரமும்
அஞ்சுகரமும் அங்குசபாசமும்
நெஞ்சிற்குடிகொண்ட நீலமேனியும்
நான்றவாயும் நாலிருபுயமும்
மூன்றுகண்ணும் மும்மதச்சுவடும்
இரண்டுசெவியும் இலங்குபொன்முடியுந்
திரண்டமுப்புரிநூல் திகழொளிமார்பும்
சொற்பதங்கடந்த துரியமெஞ்ஞான
அற்புதநின்ற கற்பகக்களிறே
முப்பழநுகரும் மூஷிகவாகனன்
இப்பொழுதென்னை யாட்கொளவேண்டித்
தாயாயெனக்குத் தானெழுந்தருளி
மாயாப்பிறவி மயக்கமறுத்துத்
திருந்தியமுதலைந் தெழுத்துந்தெளிவாய்ப்
பொருந்தவேவந்தென் னுளந்தனிற்புகுந்து
குருவடிவாகிக் குவலயந்தன்னில்
திருவடிவைத்துத் திறமிதுபொருளென
வாடாவகைதான் மகிழ்ந்தெனக்கருளி
கோடாயுதத்தாற் கொடுவினைகளைந்தே

விநாயகர் அகவல்.

உவட்டாவுபதேசம் புகட்டியென்செவியில்
தெவிட்டாதஞானத் தெளிவையுங்காட்டி
ஐம்புலன்றன்னை யடக்குமுபாயம்
இன்புறுகருணையின் இனிதெனக்கருளி
கருவிகளொடுங்குங் கருத்தினையறிவித்
திருவினை தன்னை யறுத்திருள்கடிந்து
தலமொருநான்குந் தந்தெனக்கருளி
மலமொருமூன்றின் மயக்கமறுத்தே
ஒன்பதுவாயில் ஒருமந்திரத்தால்
ஐம்புலக்கதவை அடைப்பதுங்காட்டி
ஆறாதாரத் தங்குசநிலையும்
பேறுநிறுத்திப் பேச்சுரையறுத்தே
இடைபிங்கலையின் எழுத்தறிவித்து
கடையிற்சுழிமுனைக் கபாலமுங்காட்டி
மூன்றுமண்டலத்தின் முட்டிய தூணின்
நான்றெழுபாம்பி னாவிலுணர்த்திக்
குண்டலியதனிற் கூடியவசபை
விண்டெழுமந்திரம் வெளிப்படவுரைத்து
மூலாதாரத்தின் மூண்டெழுகனலைக்
காலாலெழுப்புங் கருத்தறிவித்தே
அமுதநிலையும் ஆதித்தனியக்கமுங்
குமுதசகாயன் குணத்தையுங்கூறி
இடைச்சக்கரத்தின் ஈரெட்டுநிலையும்
உடற்சக்கரத்தின் உறுப்பையுங்காட்டி
சண்முகதூலமுஞ் சதுர்முகசூக்ஷமமும்
எண்முகமாக இனிதெனக்கருளிப்
புரியட்டகாயம் புலப்படவெனக்குத்

விநாயகர் அகவல்.

தெரியெட்டுநிலையுந் தெரிசனப்படுத்திக்
கருத்தினிற்கபால வாயில்காட்டி
இருத்திமுத்தி இனிதெனக்கருளி
என்னையறிவித் தெனக்கருள்செய்து
முன்னைவினையின் முதலைக்களைந்து
வாக்குமனமும் இல்லாமனோலயந்
தேக்கியேயென்றன் சிந்தைதெளிவித்
திருள்வெளியிரண்டுக் கொன்றிடமென்ன
அருடருமானந்தத் தழுத்தியென்செவியில்
எல்லையில்லா ஆனந்தமளித்து
அல்லல்களைந்தே அருள்வழிகாட்டிச்
சத்தத்தினுள்ளே சதாசிவங்காட்டிச்
சித்தத்தினுள்ளே சிவலிங்கங் காட்டி
அணுவிற்கணுவாய் அப்பாலுக்கப்பாலாய்க்
கணுமுற்றிநின்ற கரும்புள்ளேகாட்டி
வேடமுநீறும் விளங்கநிறுத்திக்
கூடுமெய்த்தொண்டர் குழாத்துடன்கூட்டி
அஞ்சக்கரத்தின் அரும்பொருடன்னை
நெஞ்சக்கருத்தி னிலையறிவித்துத்
தத்துவநிலையைத் தந்தெனையாண்ட
வித்தக விநாயக விரைகழல் சரணே.

முற்றிற்று.

திரு அங்கமாலை.

திருநாவுக்கரசு சுவாமிகள்.

பண் — சாதாரி.

திருச்சிற்றம்பலம்

தலையே நீவணங்காய் — தலை மாலை தலைக்கணிந்து
தலையா லேபலி தேருந் தலைவனைத் தலையே நீவணங்காய். க

கண்காள் காண்மின்களோ — கடல் நஞ்சுண்ட கண்டன்றன்னை
எண்டோள்வீசிநின் றாடும்பிரான்றன்னைக் கண்காள்காண்மின்களோ

செவிகாள் கேண்மின்களோ—சிவன் எம்மிறை செம்பவள [களோ
எரிபோல் மேனிப்பிரான்றிற மெப்போதுஞ் செவிகாள் கேண்மின்

மூக்கே நீமுரலாய் — முதுகாடுறை முக்கண்ணனை
வாக்கே நோக்கிய மங்கை மணாளனை மூக்கே நீமுரலாய். ௪

வாயே வாழ்த்துகண்டாய் — மத யானை யுரிபோர்த்துப்
பேய்வாழ் காட்டகத் தாடும்பிரான்றன்னை வாயேவாழ்த்துகண்டாய்

நெஞ்சே நீநினையாய் — நிமிர் புன்சடை நின்மலனை
மஞ்சா டும்மலை மங்கை மணாளனை நெஞ்சே நீநினையாய். ௬

கைகாள் கூப்பித்தொழீர் — கடி மாமலர் தூவிநின்று
பைவாய்ப் பாம்பரை யார்த்த பரமனைக் கைகாள் கூப்பித்தொழீர் ௭

ஆக்கை யாற்பயனென் — அரன் கோயில் வலம்வந்து
பூக்கை யாலட்டிப் போற்றியென்னாதவிவ் ஆக்கையாற் பயனென்.

கால்க ளாற்பயனென் — கறைக் கண்ட னுறைகோயில்
கோலக் கோபுரக் கோகர ணஞ்சூழாக் கால்க ளாற்பயனென். ௯

உற்றா ராருளரோ — உயிர் கொண்டு போம்பொழுது
குற்றா லத்துறை கூத்தனல் லால்நமக் குற்றா ராருளரோ. ௰

இறுமாந் திருப்பன்கொலோ — ஈசன் பல்கணத் தெண்ணப்பட்டுச்
சிறுமானேந்திதன் சேவடிக்கீழ்ச்சென் றங்கிறுமாந் திருப்பன்கொலோ.

தேடிக் கண்டுகொண்டேன் — திரு மாலொடு நான்முகனும்
தேடித் தேடொணாத்தேவனை யென்னுளே தேடிக்கண்டுகொண்டேன்.

திருச்சிற்றம்பலம்

திருநீறு.

கங்காளன் பூசுங் கவசத் திருநீற்றை
மங்காமற் பூசி மகிழ்விரே யாமாகில்
தங்கா வினைகளுஞ் சாருஞ் சிவகதி
சிங்கார மான திருவடி சேர்வரே. — திருமந்திரம்

எழு கோடி மந்திரமு மெண்ணி றவமு மிருநிலத்தி
லாழ முடைய கங்கைமுத லனந்த நதியு மமரேசன்
வீழுந் தூரகமீருமவ் வேள்வி யனைத்தும் விளம்புங்காற்
ருழுஞ் சடையான் றிருநீறு தரும்பே ரென்றுந் தாராவே.
— பிரமோத்தரகாண்டம்.

புழுதுசெஞ் சாந்திவை புனைந்து புன்மல
மொழுகுமொன் பான்றுளை யுடம்பை யென்றுநீ
யழகுசெய் திடின்மல மகலுமோ பரன்
முழுகுவெண் ணீறிடின் முற்று மாயுமே.
— சீகாளத்திப் புராணம்

உருத்திராக்கம்.

தெய்வ மாமணி கரந்தரித் தொருமனுச் செவித்தா
லைய மில்லுரு வொன்றொரு கோடியா மன்றிப்
பொய்யின் மாமணி முடிபொறுத் தீர்ம்புனல் குளிப்பின்
துய்ய கங்கைநீர் துளைந்ததா மெனமறை சொல்லும்
— உபதேச காண்டம்

சந்தி செய்யினு மந்திரங் கணிப்பினுந் தவங்க
ளெந்த நல்வினை யியற்றினுங் கண்மணி யணிந்தோர்க்
கந்த நல்வினைப் பயன்களொன் றனந்தமாய் விளையும்
வந்தி டும்பய னில்லையம் மணிதரி யார்க்கே.

கண்மணியைக் கண்டவர்க்கு பயனிலக்கந்
தொட்டவர்க்குக் கருதிற்கோடி
யுண்மையின்மெய் யணிந்தவருக் கொராயிரமாங்
கோடியுறு செபத்த னந்த
மெண்மையினெய் தறும்பின்ன ரெமதுருவம்
பெறுவர் பகைக்கென்றுந் தாழார்
வண்மையுறு மதன்பெருமை யளப்பரிதாங்
குழைகிழிக்கு மழைக்கண் மாதே.
— பேரூர்ப் புராணம்

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

சிவதோத்திரப் பாடல்

உரையுடன்

தேவாரம்

திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் அருளிச்செய்தது.

தோடுடையசெவி யன்விடையேறியோர் தூவெண்மதிசூடிக்
காடுடையசுட லைப்பொடிபூசியென் உள்ளங்கவர்கள்வன்
ஏடுடையமல ரான்முனைநாட்பணிந் தேத்தஅருள்செய்த
பீடுடையபிர மாபுரம்மேவிய பெம்மான் இவனன்றே. (க)

பதவுரை.

தோடு உடைய — தோட்டினையணிந்த, செவியன் — திருச்செவியை உடையவன், விடையேறி — இடபத்தின் மேலேறி, ஓர் தூவெண் மதிசூடி — ஒப்பற்ற தூய்மையுடைய வெள்ளிய சந்திரனைச் (சிரத்திற்)சூடி, சுடலைக்காடுஉடைய - *சுடுகாட்டிலுள்ள, பொடிபூசி-நீற்றையணிந்து, என் உள்ளங் கவர் கள்வன்—என்னைத் தன்வயப்படுத்திக்கொண்டவன். ஏடு உடைய — இதழ்களையுடைய, மலரான் — (தாமரை) மலரை ஆசனமாக உடைய பிரமன், முனை நாள்—முற்காலத்து, பணிந்து ஏத்த—அருச்சித்து வழிபட்டதனால், அருள்செய்த—அவனுக்கு அனுக்கிரகஞ்செய்தருளிய, பீடுடைய—பெருமையையுடைய, பிரமாபுரம் — பிரமபுரமென்னும் சீகாழியில், மேவிய-எழுந்தருளியிருக்கின்ற, பெம்மான் இவன் அன்றே—பெருமானாகிய இவனேதான் (எனக்குப்பால்கொடுத்தருளியவன்).

---

*சுடுகாடு — எல்லா உலகங்களும் சங்காரஞ்செய்யப்பட்டுள்ள நிலை.

மானினேர்விழி மாதராய்வழு திக்குமாபெருந் தேவிகேள்
பானல்வாயொரு பாலனீங்கிவ னென்றுநீபரி வெய்திடேல்
ஆனைமாமலை யாதியாய இடங்களிற்பல அல்லல்சேர்
ஈனர்கட்கெளி யேனலேன் திரு ஆலவாய்அரன் நிற்கவே. (உ)

(ப-ரை) மானின் நேர்விழி — மானின் (வெருள் பார்வையுடைய) கண்ணையொத்த, மாதராய் — பெண்மணியே (அதாவது மங்கையர்க்கரசியே), வழுதிக்கு —பாண்டியராஜனுக்கு, மாபெருந் தேவி—மாட்சிமைபொருந்திய பட்டத்தரசியே, கேள் —(நான்பின் வருமாறு சொல்லுகிறதைக்)கேட்பாயாக, பால்நல்வாய்—பால்மணம் மாறாத வாயையுடைய, இங்கிவன் ஒரு பாலன் என்று — இந்த இடத்தில் (வீற்றிருக்கும் ஞானசம்பந்தனாகிய) நான் ஒரு சிறு பையன் என்று, நீ பரிவு எய்திடேல் — (எனக்கு இந்த சமண குருமார்களால் யாதேனும் தீங்கு விளையுமோ என்று) நீ மனக்கவலையடையவேண்டியதில்லை, ஆனைமாமலை யாதியாய — ஆனைமலை முதலிய பெரியமலைப்பிரதேசங்களாகிய, இடங்களில் —(தலைமையிடமாகக்கொண்டு வசிக்கின்ற) ஸ்தலங்களில், பல அல்லல் சேர் ஈனர்கட்கு — பல துன்பங்களை அனுபவித்துக்கொண்டிருக்கிற கீழ்மையுடைய சமண குருமார்களுக்கு, எளியேன் அலேன் — நான் தாழ்ந்தவன் அல்லேன், திரு ஆலவாய்— (யாது காரணத்தாலென்னில்)மதுரையம்பதியில்எழுந்தருளியிருக்கின்ற,அரன் நிற்கவே —சோமசுந்தரக்கடவுள் என் உள்ளத்தில் எழுந்தருளியிருக்கிறபடியால்.

எங்கேனும் யாதாகிப் பிறந்திடினுந் தன்னடியார்க்கு
இங்கேயென்று அருள்புரியும் எம்பெருமான் எருதேறிக்
கொங்கேயும் மலர்ச்சோலைக் குளிர்பிரம புரத்துறையுஞ்
சங்கேயொத் தொளிர்மேனிச் சங்கரன்றன் தன்மைகளே(ங)

(ப-ரை) எம்பெருமான் — எமது இறைவனும், எருதேறி — இடபத்தை வாகனமாக ஊர்பவனும், கொங்கேயும் மலர்ச்சோலை—வாசனை பொருந்திய மலர்கள் நிறைந்த சோலையையுடை

மையால், குளிர்—குளிர்ச்சி பொருந்திய, பிரமபுரத்து — சீகாழி யிலே, உறையும் — எழுந்தருளியிருக்கின்றவனும், சங்கேயொத்து ஒளிர்மேனிச்சங்கரன் — சங்குபோன்று வெள்ளிய பிரகாசம் பொருந்திய திருமேனியையுடைய சிவபெருமானது, தன்மை — இயல்பு, (யாதெனில்) எங்கேனும்— (ஒருவன்) எந்த இடத்திலாறு லும், யாதாகிப் பிறந்திடினும் — எந்த இழிபிறவியில் பிறந்தாலும், தன்னடியார்க்கு இங்கே என்று அருள்புரியும் — தன்னிடத்தில் பக்தியுடைய அடியார்களுக்கு இதோ உளன் என்று கிருபை பாலிப்பது ஆகும் என்க.

மந்திர மாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தர மாவது நீறு துதிக்கப்படுவது நீறு
தந்திர மாவது நீறு சமயத்தி லுள்ளது நீறு
செந்துவர் வாய்உமைபங்கன் திருஆலவாயான் திருநீறே. (௪)

(ப—ரை) மந்திரம் ஆவதும்—மந்திரமாயிருப்பதும், நீறு— திருநீறே, வானவர் மேலதும் - தேவர்கள் தங்கள் உடலில் அணி யப்பெற்றிருப்பதும், நீறு—திருநீறே, சுந்தரம் ஆவதும் -(தரிப்பவ ருக்கு) அழகாகயிருப்பதும், நீறு—திருநீறே, துதிக்கப்படுவதும்— (சகல வேதாகம கலைகளாலும்) தோத்திரஞ் செய்யப்படுவதும், நீறே—திருநீறே, தந்திரம் ஆவதும்—முத்திக்கு உபாயமாவதும், நீறே — திருநீறே, சமயத்திலுள்ளதும் — சகல சமயங்களாலும் போற்றப்படுவதும், நீறு—திருநீறே. (இத்தகைய தன்மைவாய்ந் தது) செந்துவர்—சிவந்த பவளம்போன்ற, வாய்—திருவாயினை யுடைய, உமைபங்கன்—உமாதேவியாரைப் பாகத்தில் கொண்டவ ராகிய, திருஆலவாயான்—திருஆலவாயில் எழுந்தருளியிருக்கின்ற இறைவனது, திருநீறே—திருநீறேயாம்.

காத லாகிக் கசிந்துகண் ணீர் மல்கி
ஓது வார்தமை நன்னெறிக் குய்ப்பது
வேதம் நான்கினும் மெய்ப்பொரு ளாவது
நாதன் நாமம் நமச்சி வாயவே. (௫)

(ப-ரை) காதல் ஆகி—அன்பு முதிர்ந்து, கசிந்து—மனம் நெகிழ்ந்து, கண்ணீர்மல்கி—கண்களில் நீர்நிறைந்து, ஓதுவார் தமை—ஓதுகின்றவர்களை, நன்னெறிக்கு—முத்திச்செந்நெறிக்கு, உய்ப்பது-செலுத்துவதும், வேதம் நான்கினும்—நான்கு வேதங்களி னுள்ளும், மெய்ப்பொருளாவது—உண்மைப்பொருளாயிருப்பதும், நாதன்—இறைவனது, நாமம்—திருநாமமாகிய, நமச்சிவாயவே — "நமச்சிவாய" என்னும் திருவைந்தெழுத்தேயாம்.

வம்பார் குன்றம் நீடுயர் சாரல் வளர்வேங்கைக்
கொம்பார் சோலைக் கோலவண்டியாழ்செய் குற்றாலம்
அம்பால்நெய்யோடு ஆடல்அமர்ந்தான் அலர் கொன்றை
நம்பான்மேய நன்னகர்போலும் நமரங்காள். (௬)

(ப-ரை) நமரங்காள் — (அடியார்களாகிய) நம்மவர்களே! வம்பு—வாசனை, ஆர்—நிறைந்த, குன்றம் — மலையில், சாரல் வளர்—சாரல் மழையினால் வளர்கின்றதும், நீடுயர்—நீண்டு உயர்ந் ததுமான, வேங்கைக் கொம்பார் சோலை—வேங்கை மரத்தின் கொப்புகள் அடர்ந்த சோலையில், கோலவண்டு—அழகிய வண்டு கள், யாழ்செய்—ரீங்காரம் பண்ணுகின்ற, குற்றாலம்—குற்றாலம் என்னும் தலம், அம்பால் நெய்யோடு—அழகிய பாலையும் நெய்யை யும் அபிடேகஞ் செய்துகொண்டு, ஆடல் அமர்ந்தான்—திருக் கூத்தினைச் செய்கிறவனும், அலர் கொன்றை — விரிந்த கொன்றை மலரைத் தரித்தவனுமான, நம்பான்—நம்பன் என் னும் திருநாமமுடையவனாகிய சிவபெருமான், மேய —எழுந் தருளியிருக்கின்ற, நல்நகர் போலும்—நல்ல நகரம் போலும்.

மருந்தவை மந்திர மறுமைநன் னெறியவை மற்றுமெல்லாம்
அருந்துயர் கெடுமவர் நாமமே சிந்தைசெய் நன்னெஞ்சமே
பொருந்துதண் புறவினிற் கொன்றைபொன் சொரிதரத்
செருந்திசெம் பொன்மலர் திருநெல்வே [துன்றுபைம் பூம்
லியுறை செல்வர் தாமே. (எ)

(ப-ரை) நல் நெஞ்சமே—நல்ல மனமே, பொருந்துதண் புறவினில்—குளிர்ச்சி பொருந்திய சோலைகளில், கொன்றை பொன் சொரிதர—கொன்றை மரங்கள் பொன்போன்ற மலர்களைச் சொரிவதும், துன்றுபைம்பூம்—நெருங்கிய பசுமையான அழகுமிக்க, செருந்தி—செருந்திச் செடிகளின், செம்பொன் மலர்—சிவந்த பொன்போன்ற மலர்கள் மலர்ந்திருப்பதுமான, திருநெல்வேலியுறை செல்வர்தாம்—திருநெல்வேலியில் திருக்கோயில் கொண்டருளும் அருட்செல்வராகிய நெல்லையப்பராவார், அருந்துயர் கெடும் — (ஆன்மாக்களின்) அரிய பிறவித்துன்பத்தை நீக்குவதற்குரிய, மருந்து அவை மந்திரம் — மருந்தாவதும், மந்திரமாவதும் மறுமை நன்னெறியவை—மறுமை (இன்பத்திற்கு) நல்ல மார்க்கமாயிருப்பதும், மற்றமெல்லாம்—இன்னும் (ஆன்மாக்கள் அடையவேண்டிய) பலன்கள் அனைத்தையும் தருவதும் (அப்பெருமான் திருநாமமே யாதலின்) அவர் நாமமே சிந்தைசெய் — அவருடைய திருநாமமாகிய திரு ஐந்தெழுத்தையே சிந்திப்பாயாக.

போதையார் பொற்கிண்ணத் தடிசில்பொல் லாதெனத்
தாதையார் முனிவுறத் தானெனை யாண்டவன்
காதையார் குழையினன் கழுமல வளநகர்ப்
பேதையா ளவளொடும் பெருந்தகை யிருந்ததே. (அ)

(ப-ரை) போதையார் — தாமரை மலர்போலும் அழகு நிறைந்த, பொற்கிண்ணத்து பொன்னாற்செய்த கிண்ணத்திலுள்ள அடிசில் — (உமாதேவியாரால் அளிக்கப்பெற்ற பால்) உணவை, பொல்லாதெனா—(எவராலோ) எச்சில் மயங்க அளிக்கப்பெற்றதென, தாதையார் முனிவுற — பிதா (வாகிய சிவபாதவிருதயர்) கோபிக்கும்படியாக, தானெனை ஆண்டவன் — தானாக (வலிந்து) என்னை அடிமையாகக்கொண்டவனும், காதையார் குழையினன்— காதில் பொருந்திய குண்டலங்களை யுடையவனும், கழுமல வளநகர்—திருக்கழுமலமென்னும் பெயரினை யுடைய வளப்பமிக்க

பதியின்கண் (சீகாழியில்), பேதையாள் அவளொடும் — பேதைப் பருவத்தினையுடைய உமையம்மையாருடன் (கூடி), பெருந்தகை— பெருமையுடையவராகிய தோணியப்பர், இருந்ததே — நன்கு எழுந்தருளியிருக்கின்றனரே.

கற்றுங் கெரியோம்பிக் கலியை வாராமே
செற்றார் வாழ்தில்லைச் சிற்றம் பலமேய
முற்றா வெண்டிங்கள் முதல்வன் பாதமே
பற்றா நின்றாரைப் பற்றா பாவமே. (கூ)

(ப-ரை) கற்றங்கு — (தாம் வேதாகம நூல்களில்) படித்த படியே, எரியோம்பி-(மூவகை) அக்கினி காரியங்களையும் முறையே செய்து, கலியை வாராமே—துன்பமானது தங்களைவந்து அணுகாத வண்ணம், செற்றார்—வென்றவர்களாகிய (உத்தமர்கள்), வாழ்— வாழ்கின்ற, தில்லைச் சிற்றம்பலமேய—சிதம்பர சிதாகாச (கனக) சபையிலெழுந்தருளிய, முற்றா — முதிராத, வெண்டிங்கள் — வெள்ளிய (மூன்றாம்பிறை) சந்திரனை (அணிந்த), முதல்வன்— தலைவராகிய (சிவபிரானது), பாதமே—திருவடிகளையே, பற்றா நின்றாரை—ஆதாரமாகப் பற்றிக்கொண்டவர்களை, பற்றாபாவமே— பாவங்கள் சேரமாட்டா.

இடரினுந் தளரினும் எனதுறுநோய்
தொடரினும் உனகழல் தொழுதெழுவேன்
கடல்தனி லமுதொடு கலந்த நஞ்சை
மிடறினி லடக்கிய வேதியனே
இதுவோவெமையாளுமா றீவதொன்றெமக்கில்லையேல்
அதுவோவுனதின் னருளாவடுதுறை யரனே. (ம)

(ப-ரை) கடல்தனில்-திருப்பாற்கடலினிடத்தே (தோன்றிய) அமுதொடுகலந்த நஞ்சை—அமுதத்துடன்கூடிய விடத்தை, மிடறினிலடக்கிய-(தேவர்களுக்கு கேடுவராவண்ணம்) தமது கண்டத்தி லடக்கிய, வேதியனே-வேதகாரண முதல்வனே, இடரினும்-துன்பம்

வந்தகாலத்திலும், தளரினும் — (மூப்பு முதலியவற்றால்) மெலிவு வந்த இடத்தும், எனதுறு நோய் தொடரினும் — என்னுடைய உடம்பில் நோய்கள் பொருந்தியபொழுதும், உனகழல் தொழுதெழுவேன் — தேவரீருடைய திருவடித் தாமரைகளையே வணங்குவேன்; (அவ்வண்ணமாகவும்) இதுவோ எமை ஆளுமாறு — இதுதானோ அடியேனை ஆட்கொள்ளும் தன்மை, ஈவதொன்று எமக்கு இல்லையேல் — தேவரீர் எனக்குத் திருவருள் புரியாதிருந்தால், அதுவோ உனது இன்னருள் ஆவடுதுறை அரனே - திருவாவடுதுறையிலெழுந்தருளியிருக்கும் சிவபெருமானே, அப்படியிருப்பது தேவரீரது இனிய கருணைக்கு அழகாகுமோ!

திருச்சிற்றம்பலம்.

திருநாவுக்கரசுநாயனார் அருளிச்செய்தது

கூற்றாயின வாறு விலக்ககிலீர்
  கொடுமைபல செய்தன நானறியேன்
ஏற்றாயடிக் கேயிர வும்பகலும்
  பிரியாது வணங்குவ னெப்பொழுதும்
தோற்றாதென் வயிற்றி னகம்படியே
  குடரோடு துடக்கி முடக்கியிட
ஆற்றேனடி யேனதி கைக்கெடில
  வீரட்டானத் துறை யம்மானே. (க)

(ப-ரை) கெடிலம் — திருக்கெடில நதிக்கரையிலுள்ள, அதிகை வீரட்டானத்து — திருவதிகை வீரட்டானம் என்னும் தலத்தில், உறை — எழுந்தருளியிருக்கிற, அம்மானே—பிதாவே, கூற்று ஆயின ஆறு — (சூலை நோயானது) யமனை ஒத்துவந்து வருத்துகின்ற விதத்தை, விலக்ககிலீர் — நீக்கியருளுகின்றீரில்லை, செய்தன பல கொடுமை — (அதற்கேதுவாக) முன் செய்தனவாய

பல கொடுமைகளை, நானறியேன்—நான் அறிகின்றிலேன், ஏற்றாய்—(எனினும் எளியேனையும்) ஏற்றுக்கொண்டவராகிய தேவரீரது, அடிக்கே—திருவடிகளையே, இரவும் பகலும் எப்பொழுதும்—இரவு பகலாகிய எக்காலத்தும், பிரியாது—விட்டு நீங்காது, வணங்குவன் தொழுபவன் ஆவேன், தோற்றாது—புலப்படாமல், என் வயிற்றின் அகம்படியே — எனது வயிற்றின் உள்ளிடத்தேயே, குடரோடு துடக்கிமுடக்கியிட—குடரோடு சுற்றி முறுக்கா நிற்க, அடியேன்—அடியேன், ஆற்றேன் — பொறுக்கமாட்டேன்.

சொற்றுணை வேதியன் சோதி வானவன்
பொற்றுணைத் திருந்தடி பொருந்தக் கைதொழக்
கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும்
நற்றுணை யாவது நமச்சி வாயவே. (உ)

(ப-ரை) துணைசொல் — (ஆன்மாக்களுக்கு) உற்றதுணையென்று சொல்லப்படும், வேதியன் — அந்தணனும், சோதி — (ஞான) ஒளிப்பிழம்பாகிய, வானவன் — தேவனுமாகிய இறைவனது, பொன் — பொலிவினையுடைய, திருந்து —திருத்தமாகிய துணையடி—இணையடிகளை, பொருந்த — சிரசில் பொருந்தும்படி, கைதொழ—கை தொழுதலால், கல்துணை — கல்லோடு, பூட்டி — சேர்த்துக்கட்டி, ஓர் — ஒப்பற்ற, கடலிற்பாய்ச்சினும் — கடலில் (என்னைப்) புகச் செலுத்தினாலும், நல்துணையாவது—எனக்குஉற்ற நல்ல துணையாவது, நமச்சிவாயவே — நமச்சிவாயவென்னும் திருவைந்தெழுத்தேயாம்.

மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறைப் பொய்கையும் போன்றதே
ஈச னெந்தை யிணையடி நீழலே. (௩)

(ப-ரை) ஈசன் எந்தை இணையடி நீழலே — (எமது) பரமபிதாவாகிய சிவபிரானது இரண்டு திருவடிகளின் நீழலானது

மாசு இல்வீணையும்—குற்றம் அற்றவீணைவாத்திய ஒலியையும், மாலை மதியமும்—இராக்காலத்து சந்திரஒளியையும், வீசு தென்றலும் — உலாவுகின்ற தென்றற் காற்றையும், வீங்கிள வேனிலும் — மிக்க இளவேனிற் காலத்தையும், மூசுவண்டு அறை-நெருங்கியவண்டுகள் இசைபாடுகின்ற (பூக்களையுடைய), பொய்கையும் போன்றது — தடாகத்தையும் ஒத்திருந்தது.

அரியானை அந்தணர்தம் சிந்தையானை
அருமறையின் அகத்தானை அணுவை யார்க்கும்
தெரியாத தத்துவனைத் தேனைப் பாலைத்
திகழொளியைத் தேவர்கள்தங் கோனை மற்றைக்
கரியானை நான்முகனைக் கனலைக் காற்றைக்
கனைகடலைக் குலவரையைக் கலந்து நின்ற
பெரியானைப் பெரும்பற்றப் புலி யூரானைப்
பேசாத நாளெல்லாம் பிறவா நாளே. (ச)

(ப-ரை) அரியானை — (அன்பர்களன்றி ஏனையோரால்) அறியப்படாதவரை, அந்தணர்தம் சிந்தையானை — அழகிய தண்ணளியுள்ள பெரியோர்களின் மனமே கோயிலாகக்கொண்டருளியவரை, அருமறையின்—அருமையான வேதங்களின், அகத்தானை — உள்ளத்தில் விளங்குகின்றவரை, அணுவை — பரம அணுவாந் தன்மையுடையவரை, யார்க்குந்தெரியாத தத்துவனை — (இறைவன் அறிவிற்கலந்து உணர்த்தவுணரும் முத்தான்மாக்கள் அன்றி) ஏனைப் பெத்தான்மாக்களுக்குத் தெரிந்துகொள்ளமுடியாத தத்துவ சொரூபரை, தேனை—தேன்போன்ற இனிமையுடையவரை, பாலை — பாலைப்போன்ற மேன்மைக்குணம் பொருந்தியவரை, திகழ் ஒளியை — விளங்குகின்ற சோதியை, தேவர்கள் தம் கோனை — தேவர்களுக்குத் தலைவரை, அக்கரியானை — அந்தக் கருநிறமுடைய விஷ்ணுவை, நான்முகனை — பிரமதேவனை, கனலை — அக்னியை, காற்றை — வாயுவை, கனைகடலை — ஒலிக்கின்ற சமுத்திரத்தை,

குல வரையை—கூட்டமாகிய மலைகளை, கலந்து நின்ற — (இவைகளில், ஒன்றுமல்லாமல், இரண்டுமல்லால் அத்துவிதமாகச்) சேர்ந்து நிற்கின்ற, பெரியானை—மகத்தான சிவபரம்பொருளை, பெரும்பற்றப் புலியூரானை— பெரிய பேரானந்தத்தைத் தரும்படியான சிதம்பரத்தில் எழுந்தருளியுள்ளவனை, பேசாத நாளெல்லாம் பிறவா நாளே — அவரது பெரும் திருவருட் குணங்களை வாயாரச் சொல்லித் துதியாத நாட்களெல்லாம் நாம் பூமியிலே பிறவாமலிருந்த நாட்களாகும். (அவை இறந்தொழிந்த நாட்களென்பது பொருள்). மற்று: அசை.

அப்பன் நீ அம்மைநீ ஐயனும் நீ
அன்புடைய மாமனும் மாமி யும்நீ
ஒப்புடைய மாதரும் ஒண்பொரு ளும்நீ
ஒருகுலமுஞ் சுற்றமும் ஒரூ ரும்நீ
துய்ப்பனவும் உய்ப்பனவுந் தோற்று வாய்நீ
துணையாய்என் னெஞ்சந் துறப்பிப் பாய்நீ
இப்பொன்நீ யிம்மணிநீ யிம்முத் தும்நீ
இறைவன்நீ யேறூர்ந்த செல் வநீயே. (ரு)

(ப-ரை) அப்பன் நீ — (அடியேனுக்கு) பிதாவும் தேவரீரே, அம்மை நீ — மாதாவும் தேவரீரே, ஐயனும் நீ — தலைவரும் தேவரீரே, அன்புடைய மாமனும் மாமியும் நீ — அன்புகொண்ட மாமனும் மாமியாரும் தேவரீரே, ஒப்புடைய மாதரும் ஒண்பொருளும் நீ — சமத்துவமுடைய மனைவியும் உயர்ந்த திரவியமும் தேவரீரே, ஒரு குலமும் சுற்றமும் ஒரூரும் நீ — ஒரு கோத்திரமும் பந்துக்களும் ஒரு ஊரும் தேவரீரே, துய்ப்பனவும் உய்ப்பனவும் தோற்றுவாய் நீ—நான் அனுபவிக்கின்ற அனுபவமும் நான் அடையும்படியான மேற்கதியையும் காட்டியருளுவதும் தேவரீரே, துணையாய் என்னெஞ்சம் துறப்பிப்பாய் நீ — உயிரோடு துணையாய்க் கலந்துநின்று என் மனத்தைத் துறவு நிலையிற் செலுத்துவதும்

தேவரீரே, இப்பொன் நீ—இந்தச் செல்வங்களும் தேவரீரே, இம் மணி நீ—இந்த ரத்தினமும் தேவரீரே, இம்முத்து நீ-இந்தமுத்துக் களும் தேவரீரே, இறைவன் நீ — எமது தலைவரும் தேவரீரே, ஏரூர்ந்த செல்வம் நீயே—இடபத்தை வாகனமாக ஏறி நடத்தும் திருவருட்செல்வரும் தேவரீரே.

கருவுற்ற நாள்முத லாகவுன் பாதமே காண்பதற்கு
உருகிற்றென் உள்ளமும் நானுங் கிடந்தலந் தெய்த்தொழிந்தேன்
திருவொற்றி யூரா திருவால வாயா திருவாரூரா
ஒருபற்றி லாமைபுங் கண்டிரங் காய்கச்சி யேகம்பனே. (சு)

(ப-ரை) கருவுற்ற நாள்முதலாக உன்பாதமே காண்பதற்கு —மாதாவின் கருவிலே பொருந்திய காலமுதலாகத் தேவரீரது திருவடித்தாமரைகளைக்கண்டு தெரிசிப்பதற்காக, உருகிற்றென் உள்ளமும் நானும் கிடந்து அலந்து எய்த்து ஒழிந்தேன்—எனது மனமானது (அக்கினியிலிட்ட வெண்ணெய்போல்) உருக்கங் கொண்டது, நானும் எங்கும் தேடிக்காணாமையால் களைப்படைந்து வாட்டமுற்றேன், திருவொற்றியூரா திருவாலவாயா திருவாரூரா—திருவொற்றியூரிலெழுந்தருளி யிருப்பவரே, மதுரையில் சொக்க லிங்க மூர்த்தியாய் எழுந்தருளியிருப்பவரே, திருவாரூரில் தியாக ராஜப்பெருமானாயெழுந்தருளியிருப்பவரே, ஒருபற்று இலாமை யுங்கண்டு இரங்காய் கச்சி ஏகம்பனே — காஞ்சிபுரத்திலே எழுந் தருளியிருக்கும் ஏகம்பநாதரே (அடியேனுக்கு) உம்மைத்தவிர வேறு யாதொரு ஆதரவுமில்லாமலிருப்பது நோக்கி கிருபை செய் தருளவேண்டும்.

புழுவாய்ப் பிறக்கினும் புண்ணியா வுன்னடியென்மனத்தே
வழுவா திருக்க வரந்தர வேண்டுமிவ் வையகத்தே
தொழுவார்க் கிரங்கி யிருந்தருள் செய்பா திரிப்புலியூர்ச்
செழுநீர்ப் புனற்கங்கை செஞ்சடை மேல்வைத்ததீவண்ணனே. (எ)

(ப-ரை) புழுவாய்ப்பிறக்கினும் புண்ணியா உன்னடி என் மனத்தே—(அடியேன் இனிவரும் பிறப்பில்) புழுவடிவாக வந்து பிறந்தாலும் தருமவடிவினராகிய தேவரீரது திருவடிகள் எனது மனத்தை (விட்டு), வழுவாதிருக்க வரந்தரவேண்டும் — ஒருசிறிதும் நழுவாமல் பதிந்திருக்கும்படியான வரத்தை (தேவரீர் அடியேனுக்குக்) கொடுத்தருளப்பிரார்த்திக்கின்றேன். இவ்வையகத்தே தொழுவார்க்கு இரங்கி இருந்தருள் செய் — இந்நிலவுலகத்திலே (தேவரீரை) வணங்குகின்ற (உண்மை) அடியார்கள்பால் இரக்கமுடையவராகயிருந்து கிருபை பாலிக்கின்ற, பாதிரிப்புலியூர்ச் செழுநீர்ப்புனற்கங்கை செஞ்சடைமேல் வைத்த தீ வண்ணனே— திருப்பாதிரிப்புலியூரில் எழுந்தருளி, செழிப்பானநீர்ப்பெருக்கினையுடைய கங்கை நதியைச் சடைமேற்சூடிய அக்கினி சொரூபரே.

திருவேயென் செல்வமே தேனே வானோர்
செழுஞ்சுடரே செழுஞ்சுடர்நற் சோதி மிக்க
உருவேஎன் னுறவேஎன் ஊனே ஊனின்
உள்ளமே உள்ளத்தி னுள்ளே நின்ற
கருவேயென் கற்பகமே கண்ணே கண்ணிற்
கருமணியே மணியாடு பாவாய் காவாய்
அருவாய வல்வினைநோய் அடையா வண்ணம்
ஆவடுதண் டுறையுறையும் அமர ரேறே. (அ)

(ப-ரை) திருவே என் செல்வமே தேனே — (ஞானக்கண்ணால் காண்போர்க்கு) மிக்க அழகுடையவரே, எனது செல்வமே, தேன்போன்ற இனிமையுடையவரே, வானோர் செழுஞ் சுடரே— தேவர்களுக்கு மிக்க ஒளியே, செழுஞ்சுடர் நற்சோதிமிக்க உருவே—மிகுந்த அக்கினியிலுண்டாகிய நற்பிரகாச மிகுந்த உருவத்திருமேனியுடையவரே, என்னுறவே — எனது அன்பே, என் ஊனே — என் சரீரமும் ஆனவரே, ஊனின் உள்ளமே — அச்சரீரத்திலுள்ள மனமே, உள்ளத்தின் உள்ளே நின்ற கருவே— அம்மனத்திற்கு பிறப்பிடமாகிய உயிரே, என் கற்பகமே—எனக்கு

விரும்பியதைக்கொடுக்கும் கற்பக விருக்ஷமே, கண்ணே—கண் போன்றவரே, கண்ணிற் கருமணியே—கண்ணின் கருவிழியே, மணியாடு பாவாய்—அக்கருவிழியின் மத்தியில் பிரதிபலிக்கின்ற பதுமையே, அருவாய வல்வினை நோய் அடையாவண்ணம்—உருவமில்லாத தீவினையின் காரியமாகிய வியாதி என்னைப்பீடிக்காத விதமாய், ஆவடுதண்டுறையுறையும் அமரரேறே—திருவாவடுதுறையில் எழுந்தருளிய தேவாதிதேவனே, காவாய்—அடியேனைக் காப்பீராக.

நாமார்க்குங் குடியல்லோம் நமனை யஞ்சோம்
நரகத்தி லிடர்ப்படோம் நடலை யில்லோம்
ஏமாப்போம் பிணியறியோம் பணிவோ மல்லோம்
இன்பமே யெந்நாளுந் துன்ப மில்லை
தாமார்க்குங் குடியல்லாத் தன்மை யான
சங்கரன்நற் சங்கவெண் குழையோர் காதிற்
கோமாற்கே நாமென்றும் மீளா ஆளாய்க்
கொய்ம்மலர்ச்சே வடியிணையே குறுகினோமே. (கூ)

(ப-ரை) நாமார்க்குங் குடியல்லோம்—நாம் (இவ்வுலகத்திலுள்ள) எவர்களுக்கும் அடிமையல்லோம், நமனையஞ்சோம்—எமனுக்குப் பயப்படமாட்டோம், நரகத்தில் இடர்ப்படோம்—(ஆதலின்) நரக துன்பத்தை அனுபவிக்க மாட்டோம், நடலை இல்லோம்—பயப்படமாட்டோம், ஏமாப்போம்—(ஞானச் செல்வமிகுதியால்) இறுமாப்புடையோம், பிணியறியோம்—நோயென்பது இத்தன்மைத்தென யாமறியோம், பணிவோம் அல்லோம்—(இவ்வுலகிலுள்ள மனித வர்க்கத்துட்பட்டார் யாரையும்) வணங்கமாட்டோம், எந்நாளும் இன்பமே—எந்நாளும் இன்பமேயுடையோம், துன்பமில்லை-(எமக்கு) துன்பமென்பது கிடையாது, தாமார்க்குங் குடியல்லாத் தன்மையான—தான் எவருக்கும் அடிமையில்லாத (பெரும்) தன்மையினையுடைய, சங்கரன்—என்றும்

சுபத்தையே செய்கின்றவர், நற்சங்க வெண்குழை—நல்ல (வலம்புரிச்) சங்கினாலாய வெள்ளிய குண்டலத்தை (யணிந்த), ஓர் காதிற் கோமாற்கே — ஒரு திருக்காதினை யுடைய தலைவருக்கே, நாம் என்றும் மீளா ஆளாய் — நாம் எந்தக்காலத்தும் திரும்பாத அடிமையாய், கொய்மலர்ச் சேவடியிணையே குறுகினோமே—(அப்பெருமானது) கொய்து எடுத்த மலர்போலும் சிவந்த திருவடிகளையே சரண்புகுந்தோம்.

சங்கநிதி பதுமநிதி யிரண்டுந் தந்து
　　தரணியொடு வானாளத் தருவரேனும்
மங்குவார் அவர்செல்வம் மதிப்போ மல்லோம்
　　மாதேவர்க் கேகாந்தரல்லராகில்
அங்கமெலாங் குறைந்தழுகு தொழுநோயராய்
　　ஆவுரித்துத் தின்றுழலும் புலையரேனுங்
கங்கைவார் சடைக்கரந்தார்க் கன்பராகில்
　　அவர்கண்டீர் நாம் வணங்குங் கடவுளாரே. (௰)

(ப-ரை) சங்கநிதி—சங்கினது வடிவம்போன்ற (தேவலோகத்திலுள்ள) செல்வம், பதுமநிதி — தாமரைவடிவமாகிய (தேவலோகத்திலுள்ள) செல்வம், இரண்டுந்தந்து—(ஆகிய) இருநிதியங்களையும் கொடுத்து (அன்றியும்), தரணியொடு வான் ஆளத்தருவரேனும்—நிலவுலகத்துடனே சுவர்க்கத்தையும் (எனக்கு) ஆட்சி புரியும்படி அளிக்கும் (உரிமையுள்ளவராக) இருந்தாலும், மாதேவர்க்கு ஏகாந்தரல்லராகில் — (அவர்) சிவபிரானுக்கு அந்தரங்க அன்பு இல்லாதவராக யிருந்தால், மங்குவார் அவர் செல்வம் மதிப்போமல்லோம்—(ஒரு காலத்தில்) கெடுந்தன்மையுள்ள அவரது செல்வத்தை (ஒரு பொருளாகக்) கொள்ளமாட்டோம், கங்கைவார் சடைக்கரந்தார்க்கன்பராகில் —கங்கா நதியைச் சடையில் ஒளித்தருளிய சிவபிரானுக்கு அடியவராக யிருந்தால், அங்கமெலாங் குறைந்தழுகு தொழு நோயராய் — (உடம்பின்) உறுப்புக்களெல்லாங்குறைந்து சீயொழுகுகின்ற குஷ்ட நோயுடையவராய், ஆவுரித்

தத்தின்றழலும் புலையரேனும் — பசுவின் தோலையுரித்து (அதன் மாம்சத்தை) உணவாகக் கொண்டு துன்பத்திற்காளாகும் புலைச் சாதியிற் பிறந்தாரேனும், அவர் கண்டீர் நாம் வணங்கும் கடவுளாரே — அவரே எம்மால் வணங்கப்படுகிற கடவுளென்று (நீங்கள்) தெரிந்துகொள்ளுங்கள்.

திருச்சிற்றம்பலம்

ஸ்ரீ சுந்தரமூர்த்தி நாயனர் அருளிச்செய்தது

பித்தாபிறை சூடிபெரு மானே யருளாளா
எத்தான் மறவாதேநினைக் கின்றேன் மனத் துன்னை
வைத்தாய்பெண்ணைத் தென்பால்வெண்ணெய்நல்லூரருட்டுறையுள்
அத்தாவுனக் காளாயினி யல்லேனெனலாமே. (க)

(ப-ரை) பித்தா—பித்தரே, பிறைசூடி — பிறைச்சந்திரனை யணிந்தவரே, பெருமானே—தலைவரே, அருள் ஆளா — அருளை உடையவரே, எத்தான் — எத்தகைய காரணத்தாலும், மறவாது —மறவாமல், நினைக்கின்றேன் — சிந்திக்கின்றவனாகிய எனது மனத்து — மனத்தினிடத்தில், உன்னை வைத்தாய் — உமது திருவுருவத்தை எழுந்தருளச் செய்தவரே, பெண்ணை — பெண்ணையாற்றின், தென்பால் — தென்கரையிலுள்ள, வெண்ணெய் நல்லூர் — திருவெண்ணெய் நல்லூரின்கண்ணுள்ள, அருட்டுறையுள் — திருவருட்டுறையென்னும் ஆலயத்தில் எழுந்தருளியுள்ள, அத்தா — பிதாவே, உனக்கு — தேவரீருக்கு, ஆளாய் — அடிமைப்பட்டு, இனி—அதன்மேலும், அல்லேன் எனல் — ஆள் அல்லேன் என்று கூறுதல், ஆமே — தகுமோ.

ஊனாயுயி ரானாயுட லானாயுல கானாய்
வானாய்நில னானாய்கட லானாய்மலை யானாய்
தேனார்பெண்ணைத் தென்பால் வெண்ணெய் நல்லூரருட்டுறையுள்
ஆனாயுனக் காளாயினி யல்லேனெனலாமே. (உ)

(ப-ரை) ஊன் ஆய்—தசை ஆனாய், உயிர் ஆனாய்—உயிரும் ஆயினாய், உடல் ஆனாய்—உடம்பாயினாய், உலகு ஆனாய் — உலக மாயினாய், வான் ஆய் — ஆகாயமாகினாய், நிலன் ஆனாய்—பூமியாகி னாய், கடல் ஆனாய்—சமுத்திரமானாய், மலை ஆனாய்—மலைகளானாய், தேன் ஆர்—தேன் துளிக்கின்ற, பெண்ணைத்தென்பால்—பெண்ணை யாற்றின் தென்கரையிலுள்ள, வெண்ணெய்நல்லூர் — திருவெண் ணெய்நல்லூரிலுள்ள, அருட்டுறையுள்—திருவருட்டுறை என்னும் ஆலயத்தில், ஆனாய்—எல்லாமாய் எழுந்தருளியவனே, உனக்கு — தேவரீருக்கு, ஆளாய் — அடிமைப்பட்டு (இருக்கவும்), இனி — அதன்மேல், அல்லேன் எனல் — அடிமை அல்லேன் எனக்கூறுதல், ஆமே — தகுமோ

மற்றுப்பற்றெனக்கின் றிநின் றிருப்பாதமேமனம்பாவித்தேன்
பெற்றலும்பிறந்தேனினிப்பிறவாததன்மைவந்தெய்தினேன்
கற்றவர்தொழு தேத்துஞ்சீர்க்கறையூரிற்பாண்டிக்கொடுமுடி
நற்றவாவுனை நான்மறக்கினுஞ்சொலுநா நமச்சிவாயவே.(௩)

(ப-ரை) எனக்கு—அடியேனுக்கு, பற்று - பற்றும் தொடர்பு, மற்று இன்றி—வேறு இல்லாமல், நின் திருப்பாதமே — நினது திரு வடியையே, மனம்—மனத்தினிடத்து, பாவித்தேன்—பற்றாக நினைக் கப்பெற்றேன், பெற்றலும்—நினைக்கப்பெறலும், பிறந்தேன்—பிறந் ததினால் உண்டாகிய பயனை அடைந்தேன், இனி—மேல், பிறவாத தன்மை — பிறக்கப்பெறாத தன்மையை, வந்தெய்தினேன் — கை வந்து கிடைக்கப்பெற்றேன், கற்றவர் — கற்றறிந்த பெரியார், தொழுது ஏத்தும் — தொழுது வணங்கித்துதிக்கின்ற, சீர் — சிறப்புவாய்ந்த, கறையூரில்—கறையூரின்கண், பாண்டிக்கொடுமுடி —திருப்பாண்டிக்கொடுமுடியில் எழுந்தருளியிருக்கின்ற, நல்தவா —நல்ல தவவடிவினையுடையவரே, உனை — தேவரீரை, நான் — அடியேன், மறக்கினும் – மறக்கப்பெறினும், நா — எனது நாக்கு, நமச்சிவாய—(நமச்சிவாய) என்னும் திருவைந்தெழுத்தை, சொல் லும் — சொல்லிக்கொண்டிருக்கும்.

வாழ்வாவது மாயம்மிது மண்ணாவது திண்ணம்
பாழ்போவது பிறவிக்கடல் பசிநோய்செய்த பறிதான்
தாழாதறஞ் செய் மின் தடங் கண்ணான்மல ரோனும்
கீழ்மேலுற நின்றான் திருக் கேதாரமெனீரே (௪)

(ப-ரை.) வாழ்வாவது — (இவ்வுலக) வாழ்க்கையாவது, மாயம்—நிலையில்லாதது; இது மண்ணாவது திண்ணம்—இவ்வுடம்பு மண்ணின் தன்மையை யடைவது உறுதி, பாழ்போவது—வீணாகப் போவது, பிறவிக்கடல் —பிறவி (என்ற) சமுத்திரம், (அதற்குக் காரணம்) பசிநோய்—பசிப் (என்னும்) பிணி, செய்தபறிதான் — தோற்றுவித்த தன்மையேதான், ஆதலின் (பிறவிதீர்தற்பொருட்டு) தாழாது—தாமதியாமல், அறம்செய் மின் — தருமம் செய்யுங்கள், தடங்கண்ணான்—விசாலமான கண்களையுடைய விஷ்ணுவும், மலரோனும் — பிரமாவும், கீழ்மேலுற — (விஷ்ணு வராகவடிவமாகி அடியையும், பிரமா அன்னவடிவமாகி முடியையும் தேடியுங் காண முடியாதவராய்) கீழ்மேலாக, நின்றான்—நின்றவரது, திருக்கேதார மெனீரே — திருக்கேதாரம் என்று சொல்லுவீராக.

தம்மையேபுகழ்ந் திச்சைபேசினுஞ்சார்வினுந்தொண்டர் தருகிலாப்
பொய்ம்மையா ளரைப்பாடாதேயெந்தை புகலூர்பாடுமின்புலவீர்காள்
இம்மையேதருஞ் சோறுங்கூறையு மேத்தலாமிடர் கெடலுமாம்
அம்மையேசிவ லோகமாள்வதற் கியாதுமையுற வில்லையே. (௫)

(ப-ரை) புலவீர்காள்-வித்துவான்களே, தம்மையேபுகழ்ந்து — (நீங்கள்) அவர்களையே புகழ்ந்துகொண்டு, இச்சை பேசினும் — அவர்கள் விரும்பியபடி பேசினாலும், சார்வினுந் தொண்டர் தருகிலாப் — (அவர்களையே சரணாகதி அடைந்தாலும்) அடியார்களுக்கு ஒன்றுங்கொடுக்காத, பொய்ம்மையாளரைப் பாடாதே — (நிலையற்ற செல்வத்தை நிலையுள்ளதாக நினைக்கும்) பொய்வாழ்வினையுடையவர்களைப் பாடாமல், எந்தை புகலூர் பாடுமின்-எமது பரம பிதாவாகிய சிவபெருமான் எழுந்தருளியுள்ள புகலூரைப்பற்றிப்

பாடுவீர்களாக, (அவ்வாறு நீங்கள் செய்வீர்களானல்), சோறுங் கூறையும் — (உண்பதற்கு) அன்னத்தையும், (உடுப்பதற்கு) ஆடையையும், இம்மையே தரும்—இவ்வுலகத்திலேயே கொடுத்தருளுவர், ஏத்தலாம் இடர்கெடலுமாம் — தோத்திரஞ்செய்து துதித்தலுமாம், நமது பிறவித்துன்பம் நீங்கவும் பெறும், அம்மையே —இப்பிறவியின் முடிவிலே, சிவலோகம் ஆள்வதற்கு — சிவலோகத்தை ஆட்சி செய்வதற்கு, யாதும் ஐயுற வில்லையே — கொஞ்சமும் சந்தேகமே கிடையாது.

தில்லைவா ழந்தணர்தம் அடியார்க்கு மடியேன்
திருநீல கண்டத்துக் குயவனுர்க் கடியேன்
இல்லையே யென்னுத இயற்பகைக்கு மடியேன்
இளையான்றன் குடிமாறன் அடியார்க்கு மடியேன்
வெல்லுமா மிகவல்ல மெய்ப்பொருளுக் கடியேன்
விரிபொழில்சூழ்குன்றையார் விறன்மிண்டர்க்கடியேன்
அல்லிமென் முல்லையந்தார் அமர்நீதிக் கடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே. (கூ)

(ப-ரை.) ஆரூரில் அம்மானுக்கு—திருவாரூரில் எழுந்தருளியிருக்கும்இறைவருக்கு, ஆள்—ஆட்பட்டவனுகிய, ஆரூரன்—ஆரூரனுகிய யான், தில்லைவாழந்தணர்தம் — சிதம்பரத்தில் வசிக்கின்ற அந்தணர்களுடைய, அடியார்க்கும்—அடியவர்க்கும், அடியேன்—அடியவனுகின்றேன், திருநீலகண்டத்து — திருநீலகண்டமென்று சொல்லும், குயவனுர்க்கு-குயவராகிய திருநீலகண்ட நாயனுருக்கு, அடியேன் — அடியவனுகின்றேன், இல்லையே என்னுத — அடியவர்க்குத் தம்மிடத்துள்ள எப்பொருள்களையும் இல்லையென்றே சொல்லாத, இயற்பகைக்கும் — இயற்பகை நாயனுருக்கும், அடியேன் — அடியவனுகின்றேன், இளையான்றன்குடிமாறன் — இளையான்குடி மாறநாயனுரது, அடியார்க்கும்-அடியவர்க்கும், அடியேன் —அடியவனுகின்றேன், வெல்லுமா — வெற்றி பெறுந்தன்மையில், மிகவல்ல—அதிக வன்மை வாய்ந்த, மெய்ப்பொருளுக்கு — மெய்ப்

பொருள் நாயனருக்கு, அடியேன் — அடியவணுகின்றேன், விரிபொழில்சூழ்—விரிந்த சோலைகள் சூழ்ந்த, குன்றையார் — திருச்செங்குன்றூரில் திரு அவதாரஞ்செய்தவராகிய, விறன்மிண்டற்கு—விறன்மிண்ட நாயனருக்கு, அடியேன் — அடியவணுகின்றேன், அல்லி — அகவிதழ்களையுடைய, மெல்—மெல்லிய, அம் —அழகிய, முல்லையந்தார் — முல்லைமாலை யணிந்தவராகிய, அமர் நீதிக்கு — அமர்நீதி நாயனருக்கு, அடியேன்—அடியவணுகின்றேன்.

உரைப்பார் உரையுகந் துள்கவல் லார்தங்கள் உச்சியாய்
அரைக்கா டரவா ஆதியும் அந்தமு மாயினுய்
புரைக்காடு சோலைப் புக்கொளி யூரவி நாசியே
கரைக்கான்முதலையைப்பிள்ளைதரச்சொல்லுகாலனையே. (எ)

(ப-ரை) உரைப்பார் உரை உகந்து உள்கவல்லார் தங்கள் உச்சியாய் — உமதுபெருமையைக் கூறுகின்ற அடியார்களது சொற்களை விரும்பி சிந்திக்கவல்லவர்களுடைய சிரசில் விளங்கும் சிவபரம்பொருளே, அரைக்காடு அரவா—அரையின்கண் காட்டில் வசிக்கும் பாம்பினை அணிந்தவரே, ஆதியும் அந்தமும் ஆயினுய்—தோற்றத்திற்கும் முடிவிற்கும் மூல காரண மானவரே, புரைக்காடுசோலை — பழைமையான அடர்ந்த சோலைகளையுடைய, புக்கொளியூர் அவிநாசியே—திருப்புக்கொளியூர் அவிநாசியின்கண் எழுந்தருளி யிருக்கும் சிவபிரானே, காலனையே—எமதருமனை, கரைக்கான் — குளக்கரையினிடமாய், முதலையைப்பிள்ளைதரச் சொல்லு—முதலையை (முன் விழுங்கப்பட்ட) குழந்தையைத் திரும்பக் கொடுக்கும்படி ஆக்ஞை புரிந்தருளுவீராக.

பொன்னர் மேனியனே புலித்தோலை யரைக்கசைத்து
மின்னர் செஞ்சடைமேல் மிளிர்கொன்றை யணிந்தவனே
மன்னே மாமணியே மழபாடியுள் மாணிக்கமே
அன்னே யுன்னையல்லா லினியாரை நினைக்கேனே. (அ)

(ப-ரை) பொன்னர் மேனியனே—பொன் போலப்பிரகாசிக்கின்ற திருமேனியை யுடையவரே, புலித்தோலை யரைக்

கசைத்து — புலியின் தோலை அரையிலே அணிந்து, மின்னார் செஞ்சடைமேல்—பிரகாசம் பொருந்திய சிவந்த சடை முடியின் மேல், மிளிர்கொன்றை யணிந்தவனே—பிரகாசிக்கின்ற கொன்றைமாலையை அணிந்தவரே, மன்னே—இறைவரே, மாமணியே —பெரிய மணியே, மழபாடியுள் மாணிக்கமே— திருமழபாடியுள் எழுந்தருளியிருக்கின்ற உயர்ந்தரத்தினமே, அன்னே—உலகத்துக்கு மாதாவே, உன்னையல்லால்—தேவரீரைத்தவிர, இனியாரை நினைக்கேனே—(வேறு) எந்தத் தேவரைச் சிந்திக்கற்பாலேன்.

நற்றமிழ் வல்ல ஞான சம்பந்தன்
நாவினுக் கரையன் நாளைப்போவானுங்
கற்ற சூதன்நற் சாக்கியன் சிலந்தி
கண்ணப்பன் கணம்புல்ல னென்றிவர்கள்
குற்றஞ் செய்யினுங் குணமெனக் கருதுங்
கொள்கைகண்டுநின் குரைகழ லடைந்தேன்
பொற்றிரள் மணிக் கமலங்கள் மலரும்
பொய்கைசூழ் திருப்புன் கூருளானே. (கூ)

(ப-ரை) நற்றமிழ் வல்ல ஞானசம்பந்தன் — இனிய தமிழ் மொழியில் ஆற்றல்மிக்க திருஞானசம்பந்த மூர்த்தி நாயனாரும், நாவினுக்கரையன்—திருநாவுக்கரசு நாயனாரும், நாளைப்போவானும் —திருநாளைப்போவார் நாயனாரும், கற்றசூதன்—சூதுவிளையாடக் கற்ற சூதன் என்னும் நாயனாரும், நற்சாக்கியன் — நல்ல சாக்கிய நாயனாரும், சிலந்தி—புகழ்ச்செங்கட் சோழ நாயனாரும், கண்ணப்பன்-கண்ணப்ப நாயனாரும், கணம்புல்லன்-கணம்புல்ல நாயனாரும், என்றிவர்கள் — என்று சொல்லப்படும் இந்நாயன்மார்கள், குற்றம் செய்யினும்—தப்பிதங்களைச் செய்தாலும், குணமெனக்கருதும்— குணமென்று திருவுளத்து ஏற்றருளும் (தேவரீரது), கொள்கை கண்டு — தன்மையைப் பார்த்து, நின் குரை கழலடைந்தேன் — தேவரீரது ஒலிக்கின்ற திருவடியை அடைக்கலமாகவந்து சேர்ந்தேன், பொற்றிரள் மணிக்கமலங்கள் மலரும்—பொன்னிறமாகிய திரண்ட அழகிய தாமரைமலர்கள் விரிகின்ற, பொய்கைசூழ்

—தடாகக் கரையினுற் சூழப்பட்ட, திருப்புன் கூருளானே—திருப் புன்கூரில் எழுந்தருளியிருக்கும் கடவுளே.

ஏழிசையா யிசைப்பயனு யின்னமுதா யென்னுடைய
தோழனுமாய் யான்செய்யுந் துரிசுகளுக் குடனாகி
மாழையொண்கண் பரவையைத்தந் தாண்டானை மதியில்லா
ஏழையேன் பிரிந்திருக்கே னென்னாரூ ரிறைவனையே (ய)

(ப-ரை) ஏழிசையாய்—ஏழு இசை (சப்தசுரம்) மயமான வரே, இசைப்பயனுய்—இசையினுல் (அனுபவிக்கப்படும்) இன்ப மானவரே, இன்னமுதாய் — இனிமைமிக்க அமுதமயமாய், என் னுடைய—அடியேனுக்குச் சொந்தமான, தோழனுமாய்—சிநேகி தனுமாய், யான் செய்யும்—என்னுற்செய்யப்படும், துரிசுகளுக்கு —பாவச்செயல்களுக்கு, உடனாகி—ஒன்றுபட்டு நின்றும், மாழை ஒண்கண் — மான்போன்ற ஒளி பொருந்திய கண்களை யுடைய, பரவையைத்தந்து — பரவையென்ற பெயரினையுடைய பெண்ணை மனைவியாகக்கொடுத்து, ஆண்டானை — (அடியேனை) அடிமை கொண்டருளியசிவபெருமானை, மதியில்லா—(நற்) புத்தியில்லாத, ஏழையேன்—அறிவால் இழிந்தவனாகிய யான், என்னாரூரிறைவ னையே-திருவாரூரிலே எழுந்தருளியுள்ள எனது தியாகராஜப்பெரு மானை, பிரிந்திருக்கேன்—விட்டு நீங்கி (சிறிது பொழுதும் கூட) உயிர்வாழ மாட்டேன். (பிரிந்தால்உயிர்விடுவேன் என்பது கருத்து)

திருச்சிற்றம்பலம்.

திருவாசகம்

ஸ்ரீ மாணிக்கவாசக சுவாமிகள் அருளிச்செய்தது.

மெய்தான்அரும்பிவிதிர்விதிர்த்துஉன்விரையார்கழற்குஎன்
கைதான் தலைவைத்துக்கண்ணீர் ததும்பி வெதும்பிஉள்ளம்
பொய்தான் தவிர்ந்து உன்னைப்போற்றி சயசய போற்றி என்னும்
கைதான் நெகிழவிடேன்உடையாய் என்னைக்கண்டுகொள்ளே (க)

(ப-ரை) உடையாய்-என்னை யாட்கொண்டவனே, உன்--உனது, விரையார்—வாசனை நிறைந்த, கழற்கு — திருவடியைப் பெறுதற்கு, என் மெய் அரும்பி—என் தேகம் புளகித்து, விதிர் விதிர்த்து—நடுநடுங்கி, கைதான் தலை வைத்து—கைகளைத்தலையில் வைத்து, கண்ணீர் ததும்பி — கண்களில் நீரரும்பி, உள்ளம் வெதும்பி—மனம் புழுங்கி, பொய்தவிர்ந்து—பொய்யொழுக்கத்தினின்றும் நீங்கி, உன்னை — (உண்மைப்பொருளாகிய) உன்னைக் குறித்து, போற்றி—போற்றி, சயசயபோற்றி — சயசய போற்றி, என்னும்—என்று வழிபடுகின்ற, கை—ஒழுக்கத்தை, நெகிழ விடேன்—நான் தளர விடேன், (ஆதலால்) என்னை—எனது நிலையை கண்டு—நீபார்த்து, கொள்—(உன் அடியாருள் ஒருவனாக) ஏற்றுக்கொள்ளுவீராக.

வானாகி மண்ணாகி வளியாகி ஒளியாகி
ஊனாகி உயிராகி உண்மையுமாய் இன்மையுமாய்க்
கோனாகி யானெனதென் றவரவரைக் கூத்தாட்டு
வானாகி நின்றாயை யென்சொல்லி வாழ்த்துவனே. (உ)

(ப-ரை) வான்ஆகி-ஆகாயமாகி, மண் ஆகி-பிருதுவியாகி, வளியாகி—காற்றாகி, ஒளி ஆகி—தீயாகி, ஊன் ஆகி—உடம்பாகி, உயிர் ஆகி—(அந்த உடம்பில்நங்கும்) உயிராகி, உண்மையும் ஆய் —மெய்யுமாகி, இன்மையும் ஆய்—பொய்யுமாகி, கோன் ஆகி — முதல்வனாகி, அவர் அவரை—ஒவ்வொருவரையும், யான் எனது என்று — யான்எனது என்று சொல்லா நின்ற அகங்கார மமகாரங்களில் மயக்குவித்துக், கூத்தாட்டுவானாகி —கூத்தாட்டுச்செய்வோனாகி, நின்றாயை—இங்ஙனம் பல்வேறுதன்மைப்பட நின்ற உன்னை, என் சொல்லி வாழ்த்துவன் — யாதுசொல்லி யான் புகழ்வேன்.

வேண்டும் நின்கழற்கணன்புபொய்மைதீர்த்து மெய்ம்மையே
ஆண்டுகொண்டு நாயினேனை யாவவென்றருளுநீ
பூண்டுகொண்டடியனேனும்,போற்றிபோற்றியென்றுமென்றும்
மாண்டு மாண்டு வந்து வந்து மன்னநின் வணங்கவே (ங)

(ப-ரை.) மன்ன—இறைவனே, அடியனேனும்-அடியேனும், மாண்டு மாண்டு வந்து வந்தும்–பலகால் இறந்தும் பிறந்தும் உழல் வேணுபினும், பூண்டுகொண்டு — உன் திருத்தொண்டை மேற் கொண்டு, என்றும்—எப்பொழுதும், போற்றி போற்றி என்று— வணக்கம், வணக்கம் என்று, நின்வணங்க—உன்னை வணங்க, நின் கழற்கண்–உன் திருவடியினிடத்தே, அன்பு வேண்டும்—அன்புசெய் தல் உண்டாக வேண்டும், (ஆதலால்) பொய்மை தீர்த்து — பொய் யொழுக்கங்களை ஒழித்து, நாயினேனை—அடியேனை, மெய்ம்மையே ஆண்டுகொண்டு—உண்மையாகவே ஆண்டுகொண்டு, ஆவ என்று —அந்தோ என்று இரங்கி, நீ அருள்—நீ அருள்செய்வாயாக.

பாடிற்றி லேன்பணி யேன்மணிநீயொளித்தாய்க்குப்பச்சூன்
வீடிற்றி லேனை விடுதிகண் டாய்வியந் தாங்கலறித்
தேடிற்றி லேன்சிவ னெவ்விடத் தானெவர் கண்டனரென்
றோடிற்றி லேன்கிடந் துள்ளுருகேனின் றுழைத்தனனே(ச)

(ப-ரை) ஆங்கு—அவ்விடத்து, வியந்து அலறி — வியந்து அலறு நின்று, தேடிற்றிலேன் — தேடுதல் செய்திலேன், சிவன் எவ்விடத்தான்—சிவன் எவ்விடத்திலுள்ளான், எவர் கண்டனர் — யாவர் பார்த்தனர், என்று ஓடிற்றிலேன் — என்று பலவிடத்தும் ஓடா நின்றிலேன், கிடந்து உள்ளுருகேன் — பூமியில் விழுந்து மனமுருகிலேன், நின்று உழைத்தனன் — வீணே நின்று மனம் வருந்தினேன், பாடிற்றிலேன் — பாடுகின்றிலேன், பணியேன்— வணங்கேன், (அங்ஙனமாகவும்) மணி நீ ஒளித்தாய்க்கு — மாணிக் கம்போன்ற நீ என்னைவிட்டு மறைந்தனை, (மறைந்த) உன்னையடை யும்பொருட்டு, பச் ஊன் வீடிற்றிலேனை — பசுந்தசைக்குரம்பை யாகிய உடம்பைவிட்டு நீங்காத என்னை, விடுதி— கைவிட்டிடாதே.

நானார்என் உள்ளமார் ஞானங்களார் என்னையாரறிவார்
வானோர் பிரான்என்னை ஆண்டிலனேல் மதிமயங்கி
ஊனார் உடைதலையில் உண்பலிதேர் அம்பலவன்
தேனார் கமலமே சென்றூதாய் கோத்தும்பீ. (ரு)

(ப-ரை.) கோ தும்பீ—அரச வண்டே, வானோர்பிரான் — தேவர் பெருமான், என்னை ஆண்டிலனேல் — என்னை ஆண்டருள் செய்யான் ஆயின், நான் ஆர்—நான் எத்தன்மையனாயிருப்பேனோ, என் உள்ளம் ஆர் — எனது மனம் எத்தகையதாயிருக்குமோ, ஞானங்கள் ஆர் — என் அறிவு என்னுமோ, என்னை யார் அறிவார் — என்னை அறிபவர் யார் (இவை யாவும் இல்லையாம் ஆதலால்) மதிமயங்கி—மதிமயக்கங்கொண்ட (பிரமதேவனது), ஊன் ஆர் — மாமிசம் நிறைந்த, உடை தலையில்--உடைந்த தலைப்பாத்திரத்தில், உண்பலிதேர்—உண்ணுதற்குரிய பிச்சையை ஏற்கின்ற, அம்பலவன் —பொன்னம்பலவனது, தேன் ஆர் கமலமே — தேன் பொருந்திய தாமரை மலர்போலுந் திருவடியின் கண்ணே, சென்று ஊதாய்— போய் ஊதக்கடவாய்.

பூசுவதும் வெண்ணீறு பூண்பதுவும் பொங்கரவம்
பேசுவதும் திருவாயால் மறைபோலுங் காணேடி
பூசுவதும் பேசுவதும் பூண்பதுவுங் கொண்டென்னை
ஈசன்அவன் எவ்வுயிர்க்கும் இயல்பானான் சாழலோ. (சு)

(ப-ரை.) பூசுவதும் வெண்ணீறு — திருமேனியிற் பூசிக் கொள்ளுவதும் அழகிய வெண்ணீறு, பூண்பதுவும்—திருமேனியில் தரிப்பதுவும், பொங்கு — சீறுகின்ற, அரவம் — பாம்பு, திருவாயால் பேசுவதும்—அழகிய வாயினால் சொல்லுவதும், மறை போலும் — வேதம்போலும், காணேடி—(தோழியே) காண்க. பூசுவதும் பேசுவதும் பூண்பதுவும் கொண்டு — நீறு பூசுவதையும் வேதம் சொல்வதையும் அரவம் பூண்பதையும் கொண்டதனால், என்னை—யாது பயன்? ஈசன் அவன் — ஜெகதீசனாகிய அவன், எவ்வுயிர்க்கும்—எவ்வகைப்பட்ட ஜீவராசிகட்கும், இயல்பு ஆனான் —இயற்கனவே இதஞ்செய்பவனாயிருக்கிறான். (சாழல் — மக்களின் விளையாடல்களில் ஒன்று.)

அம்மையே அப்பா ஒப்பிலாமணியே
அன்பினில் விளைந்த ஆரமுதே
பொய்ம்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் தனக்குச்
செம்மையே ஆய சிவபதம் அளித்த
செல்வமே சிவபெருமானே
இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே. (எ)

(ப-ரை) அம்மையே—என்னை ஈன்ற தாயே, அப்பா—என் தந்தையே, ஒப்பு இலா — நிகரில்லாத, மணியே—மாணிக்கமே, அன்பினில் — ஆசை என்னுங்கடலில், விளைந்த — உண்டாகிய, ஆர் அமுதே—கிடைத்தற்கரிய அமுதமே, பொய்ம்மையே பெருக்கி — நிலையாதவற்றின் கண்ணேயே அறிவினைப்பெருகச் செய்து, பொழுதினை—காலத்தை, சுருக்கும்—குறைக்கின்ற (பயன்படாது கழிக்கின்ற), புழுத்து அலை—புழுப்பற்றியலைகின்ற, புலையனேன் தனக்கு—கீழ்மைக்குணமுடையேனாகிய எனக்கு, செம்மை ஆய—பெரும் நன்மைக்கு ஏதுவாகிய, சிவபதம்—சிவமாந்தன்மையை அளித்த—கொடுத்தருளிய, செல்வமே—செல்வமானவனே, சிவ பெருமானே—சிவபெருமானே, இம்மையே—இப்பிறவியிலேயே உன்னை—உன்னை, சிக்கென—கெட்டியாய், பிடித்தேன் — விடாமல் பற்றினேன், இனி — இனிமேல், எங்கு — (என்னைவிட்டு) எவ்விடத்து, எழுந்தருளுவது—நீ எழுந்தருளிச்செல்வது?

பால் நினைந்தூட்டுந் தாயினுஞ் சாலப்
பரிந்து நீ பாவியேனுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்தமாய
தேனினைச் சொரிந்து புறம்புறந் திரிந்த
செல்வமே சிவபெருமானே
யானுனைத்தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே. (அ)

(ப-ரை) நினைந்து—(குழந்தை பால் உண்டு வெகுநேரமாயிற்றென்று) எண்ணி, பால்—பாலை, ஊட்டும் — உண்பிக்கின்ற, தாயினும் — பெற்றவளினும், நீ—நீ, சால—மிகவும், பரிந்து —(கிருபையோடு) இரங்கி, பாவியேனுடைய — (ஆதாவற்ற) பாவியாகிய எனது, ஊனினை — உடலை, உருக்கி — (அனலிவிட்ட மெழுகைப்போல்) உருகச்செய்து, உள் — (என்) மனத்தினிடத்தே, ஒளி — (ஞான) சோதியை, பெருக்கி — பெருகச்செய்து, உலப்பு—சேதம்; இலா — இல்லாத, ஆனந்தமாய — பேரின்பமாகிய, தேனினை—தேனை, சொரிந்து — பொழிந்து, புறம் புறம் திரிந்த-யான் செல்லுமிடமெல்லாம் என்னுடன்திரிந்த, செல்வமே—எனது (அழிவில்லாத) ஐசுவரியமே, சிவபெருமானே—சிவபெருமானே, யான்—நான்; உன்னை-தேவரீரை, தொடர்ந்து—பின்பற்றி, சிக்கென—கெட்டியாய், பிடித்தேன் — பற்றினேன் (ஆனதால்) இனி — இனிமேல், எங்கு (என்னை விட்டு) எவ்விடத்து, எழுந்தருளுவது — நீ எழுந்தருளிச்செல்வது?

உற்றாரையான்வேண்டேன் ஊர்வேண்டேன்பேர்வேண்டேன்
கற்றாரை யான்வேண்டேன் கற்பனவும் இனியமையுங்
குற்றாலத் தமர்ந்துறையும் கூத்தா உன்குரைகழற்கே
கற்றாவின் மனம்போலக் கசிந்துருக வேண்டுவனே. . (கூ)

(ப-ரை) யான் — நானே, உற்றாரை—பந்துக்களை, வேண்டேன்—(அவ்வுறவினர்களோடு கூடிவாழ) இச்சிக்கிலேன், ஊர் — ஊரில்(குடியிருக்க), வேண்டேன்—இச்சிக்கிலேன், பேர்—பேரும், வேண்டேன்-—(அடைய) விரும்பேன், யான்—நான், கற்றாரை — (ஆகமம் முதலிய சாத்திரங்களைக்) கற்றோர்களை, வேண்டேன் — (அடைந்திருக்க)விரும்பேன்,(ஆதலால்),இனி-இனிமேல்,கற்பனவும் -கற்றுக்கொள்ளப்படுவன யாவும், அமையும்—(இத்துடன்) போதும் போதும், குற்றாலத்து— திருக்குற்றாலம் என்னும் க்ஷேத்திரத்தில், அமர்ந்து உறையும் — எழுந்தருளியிருக்கின்ற, கூத்தா — கூத்தப்பிரானே! உன்—தேவரீருடைய, குரை—சப்திக்கின்ற, கழற்கே—

(ஜெயவீரகண்டாமணியணிந்த) திருப்பாதத்துக்கே, கற்றாவின்—கன்றையுடைய பசுவைப்போல், (கற்றா — கன்று + ஆ) கசிந்து—மனங்கசிந்து, உருக—உருகும்படி, வேண்டுவன் —(உள்ளன்புடன்) இச்சிப்பேன்.

முத்திநெறி அறியாத மூர்க்கரொடு முயல்வேனைப்
பத்திநெறி அறிவித்துப் பழவினைகள் பாறும்வண்ணஞ்
சித்தமலம் அறுவித்துச் சிவமாக்கி எனையாண்ட
அத்தனெனக் கருளியவா றார்பெறுவார் அச்சோவே. (ம)

(ப-ரை) முத்தி — முத்திவீட்டின், நெறி—வழியை, அறியாத—தெரியாத, மூர்க்கரொடு—அறிவீனர்களுடன், முயல்வேனை—சேர்ந்து திரிவேனாகிய எனக்கு, பத்தி — உன்னோடு பத்தியோடிருக்கும், நெறி — மார்க்கத்தை, அறிவித்து — தெரிவித்து, பழவினைகள் — புராதனமாகிய வினைகளை, பாறும் வண்ணம் — நீங்கும்படியாக, சித்தமலம்—மனத்தினது களங்கத்தை, அறுவித்து அறும்படி கிருபைசெய்து, சிவம் ஆக்கி — சிவம் ஆம் தன்மையைச் செய்து, எனை—அடியேனை, ஆண்ட—தொண்டனாக்கிக்கொண்ட, அத்தன் — எனது தாதையாகிய கருணாகரக் கடவுள், எனக்கு — எந்தனுக்கு, அருளிய—கிருபைசெய்த, ஆறு — தன்மையை, யார் பெறுவார் — யார்பெற வல்லார்! அச்சோவே — இது அதிசயமே.

திருச்சிற்றம்பலம்

திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே யுலப்பிலா வொன்றே
உணர்வுசூழ் கடந்ததோ ருணர்வே
தெளிவளர் பளிங்கின் றிரண்மணிக் குன்றே
சித்தத்துள் தித்திக்குந் தேனே
அளிவளருள்ளத் தானந்தக் கனியே
அம்பலம் ஆடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே. (க)

(ப-ரை) ஒளிவளர் விளக்கே—ஒளி பெருகுகின்ற தீபமே, உலப்பு இல்லா — அழிவில்லாத, ஒன்றே — ஒப்பற்ற பொருளே, சூழ் உணர்வு—சென்று பற்றுகின்ற அறிவை, கடந்தது — கடந்த தாகிய, ஓர் உணர்வே — ஒப்பற்ற அறிவே, தெளிவளர்—தூய்மை வளர்கின்ற, பளிங்கின் — படிகத்தினுலாகிய, திரள் — திரண்ட மணிக்குன்றே—அழகிய மலையே, சித்தத்துள்—(அன்பரது) மனத் தினுள்ளே, தித்திக்கும்—இனிக்கின்ற, தேனே — தேனே, அளி வளர் — அன்பு வளர்கின்ற, உள்ளத்து — (அடியாரது) மனத்திற் (கனிந்த), ஆனந்தக்கனியே—இன்பவுருவாகிய பழமே, அம்பலம் —பொன்னம்பலத்தை, ஆடு அரங்கு ஆக — நடன சபையாகக் கொண்டு, (அதனிடத்து) வெளிவளர் — (யாவர்க்கும்) வெளிப் படையாய்ப் புலப்படுகிற, தெய்வக்கூத்து — தெய்வீகமாகிய கூத் தாடுதலை, உகந்தாயை —விரும்பின உன்னை, தொண்டனேன்—உன் அடிமையாகிய நான், விளம்புமாறு — புகழ்ந்துரைக்கும் வண்ணம், விளம்பு—சொல்லுவாயாக.

கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணைமா கடலை
மற்றவ ரறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்றவெஞ் சிவனைத்
திருவீழி மிழலைவீற் றிருந்த
கொற்றவன் றன்னைக் கண்டு கண் டுள்ளங்
குளிரவென் கண்குளிர்ந் தனவே. (உ)

(ப-ரை) கற்றவர் விழுங்கும் — (சைவசமய நூலனைத்தும்) கற்றோரால் விழுங்கப்படுகிற, கற்பகக்கனியை– (விரும்பியவற்றைக் கொடுக்கும்) கற்பகப் பழத்தை, கரையிலா—அளவுபடாத, கருணை மா கடலை—பெரிய கிருபா சமுத்திரத்தை, மற்றவர் அறியா — கற் றவர் அல்லாதார் அறியமுடியாத, மாணிக்க மலையை — இரத்தின மலையை ஒத்த சோதிவடிவத்தையுடைய பரம்பொருளை, மதிப்

பவர்—நினைப்பவர்களுடைய, மனம்—மனத்தில் விளங்குகிற, மணி விளக்கை—இரத்தின ஒளியை, செற்றவர்—பகைவருடைய, புரங்கள்—முப்புரங்களை, செற்ற — அழித்த, எம் சிவனை — எமது சிவபிரானை, திருவீழிமிழலை—திருவீழிமிழலையில், வீற்றிருந்த—(திருக்கோயில் கொண்டு)எழுந்தருளின, கொற்றவன்தன்னை—இறைவனை, கண்டு கண்டு—தரிசித்துத்தரிசித்து, உள்ளம் குளிர—மனங்குளிர, என் கண் குளிர்ந்தன—என் கண்கள் குளிர்ந்தன. (ஆனந்த பாஷ்பம் பெருகிற்றென்பது கருத்து.)

திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டி யழுதிடப்
பாற்கட லீந்த பிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றருள் செய்தவன்
மன்னிய தில்லை தன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற சிற்றம்
பலமே யிட மாகப்
பாலித்து நட்டம் பயில வல்லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே. (க)

(ப-ரை) பாலகன் — (வியாக்கிரபாத முனிவர்) புத்திரன் (உபமன்னியூ முனிவர்) பாலுக்குவேண்டி யழுதிட-பாலைவிரும்பி அழ,(அவனுக்குஉணவாக) பால்கடல்—பாற்கடலை, ஈந்தபிரான் — கொடுத்தருளினபிரான், மாலுக்கு—திருமாலுக்கு, அன்று — அக்காலத்தில், சக்கரம் அருள் செய்தவன் — சக்ராயுதத்தைக் கொடுத்தருளினவன், (அவன்) மன்னிய —நிலைபெற்ற, தில்லை தன்னுள் — சிதம்பரத்தில், ஆலிக்கும்—களிக்கின்ற, அந்தணர் வாழ்கின்ற — வேதியர் வாழ்கின்ற,சிற்றம்பலமே—சிற்றம்பலத்தையே, இடமாகப் பாலித்து — இடமாகக்கொண்டு, நட்டம் பயில வல்லானுக்கே — திருநடனஞ்செய்ய வல்லவனுக்கே, பல்லாண்டு கூறுதும் — பல ஆண்டுகள் நீடுழி வாழும்படி வாழ்த்துக் கூறுவோமாக.

பெரிய புராணம்

உலகெலா முணர்ந் தோதற்கரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்
மலர் சிலம்படி வாழ்த்தி வணங்குவாம். (க)

(ப-ரை) உலகு எல்லாம் — கல்வி கேள்விகளால் உயர்ந்த பெரியோர்களாலும், உணர்ந்து — (பாச, பசு ஞானங்களினுல்) அறிந்து, ஓதற்கு அறியவன் — (இத்தன்மையுடையவன் என்று) சொல்லுதற்கு முடியாத இயல்பை உடையவர், நிலவுலாவிய — சந்திரன் தவழுகின்ற, நீர்மலிவேணியன் —கங்கை நிறைந்த சடைமுடியையுடையவர், அலகில் சோதியன்—அளவுபடாத ஒளிப்பிழம்பான திருமேனியையுடையவர், அம்பலத்து ஆடுவான் — கனக சபையிலே திருநடனஞ் செய்தருளுகின்றவராகிய (நடராஜப்பெருமானது), மலர்சிலம்பு அடி—பூப்போன்று மென்மை வாய்ந்த திருச்சிலம்பையணிந்த குஞ்சிதபாதத்தை, வாழ்த்தி வணங்குவாம் — தோத்திரம் பண்ணி நமஸ்கரிப்பாம்.

வேதநெறி தழைத்தோங்க மிகுசைவத் துறைவிளங்கப்
பூதபரம் பரைபொலியப் புனிதவாய் மலர்ந்தழுத
சீதவள வயற்புகலித் திருஞான சம்பந்தர்
பாதமலர் தலைக்கொண்டு திருத்தொண்டு பரவுவாம். (உ)

(ப-ரை) வேதநெறி தழைத்து ஓங்க — வைதீக மார்க்கம் தழைத்து எந்நாளும் நிலைபெறவும், மிகு சைவத்துறை விளங்க — மேன்மைமிக்க சைவமார்க்கம் நிலைபெறவும், பூதபரம்பரைபொலிய —பரிசுத்தமாகிய அவ்வைதிக சைவபரம்பரை நிலைபெற்றோங்கவும், புனிதவாய் மல்ர்ந்தழுத —(சிவஞானங் கமழும்) பரிசுத்தமான திருவாய் மலர்ந்தழுத, சீதவளவயல்புகலி திருஞானசம்பந்தர்—குளிர்ந்த நீர்வளமிக்க வயல்கள் சூழ்ந்த சீகாழியில் அவதரித்த ஆளுடைய பிள்ளையாரது, பாதமலர் தலைக்கொண்டு — திருவடித்தாமரைகளை

சிரத்தின் மேற்கொண்டு, திருத்தொண்டு பரவுவாம்—அவர் செய்த அருட்பணிவிடைகளைச் சொல்லுகிறேன்.

இறவாத இன்பஅன்பு வேண்டிப்பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும்மீண்டும்பிறப்புண்டேலுன்னையென்று
மறவாமை வேண்டு மின்னும்வேண்டு நான்மகிழ்ந்துபாடி(ம்
அறவாநீ யாடும்போதுன் னடியின்கி ழிருக்கவென்றார். (ங)

(ப-ரை) இறவாத இன்ப அன்பு வேண்டி— ஒரு காலத்தும் கெடுதலில்லாத பேரின்பத்தை அடைய விரும்பிப் பிரார்த்தனை செய்துகொண்டு, பின்வேண்டுகின்றார் — (காரைக்கால் அம்மையார்) பின்னும் ஓர் வரம்பெற விரும்புகின்றார், பிறவாமை வேண்டும் — (இனி இவ்வுலகில்) பிறவாத வரத்தைக் கொடுத்தருளப் பிரார்த்திக்கிறேன், மீண்டும் பிறப்புண்டேல் — திரும்பவும் உலகத்தில் பிறக்கவேண்டிய நியதி இருக்குமாகில், உன்னை என்றும் மறவாமை வேண்டும்—தேவரீரை எக்காலத்தும் மறவாது இருக்கும் உத்தமமான பிறவியைக் கொடுத்தருளப் பிரார்த்திக்கிறேன், இன்னும் வேண்டும் நான் —இன்னும் ஒரு வரத்தையும் வேண்டுகிறேன், அறவா நீ யாடும்போது—தருமமூர்த்தியே தேவரீர் (கனகசபையில்) திருநடனஞ்செய்தருளுகின்ற சமயம், உன் அடியின் கீழ் — தேவரீரது குஞ்சித பாதத்தின் அடியில், நான் மகிழ்ந்து பாடி இருக்க என்றார் — நான் மகிழ்ச்சியுடன் பாடிக்கொண்டிருக்க வேண்டும் என்றும் பிரார்த்தித்தார்.

சைவசமயகுரவர் துதி

பூழியர்கோன் வெப்பொழித்தபுகலியர்கோன் கழல்போற்றி
ஆழிமிசைக் கன்மிதப்பில் அணைந்தபிரான் அடிபோற்றி
வாழிதிரு நாவலூர் வன்றொண்டர் பதம்போற்றி
ஊழிமலி திருவாத வூரர்திருத் தாள்போற்றி.

(ப-ரை) பூழியர் கோன்-பாண்டிய அரசனது (கூன்பாண்டியனது), வெப்பொழித்த சுரநோயை நீக்கிய, புகலியர்கோன் —

சீகாழித்தலைவர் (திருஞான சம்பந்தரது), கழல்போற்றி — வீரக் கழலையணிந்த திருவடிகளை வணங்குவாம்; ஆழிமிசை—சமுத்திரத் தின் மேல், கல்மிதப்பில்—கல்லாகிய தோணியில், அணைந்தபிரான் —(திருப்பாதிரிப்புலியூர்க் கரையில் வந்து) சேர்ந்த திருநாவுக்கரசு சுவாமிகளது, அடிபோற்றி—திருவடிகளைத் துதிப்பாம்; வாழி திரு நாவலூர்— நிலைபெற்ற திருநாவலூரிலே (திரு அவதாரஞ்செய்தரு ளிய) வன்றொண்டர் — வலிந்து ஆட்கொள்ளப்பெற்ற தொண்ட ராகிய (சுந்தரமூர்த்தி சுவாமிகளது) பதம் போற்றி — பாதங்களை வணங்குவாம்; ஊழிமலி-ஊழிக்காலத்தும் நிறைந்த, திருவாதவூரர்- திருவாதவூர் என்னும் தலத்தில் அவதரித்த மாணிக்கவாசக சுவாமி களது, திருத்தாள் போற்றி—அழகிய திருவடிகளை வாழ்த்துவாம்.

திருக்கூட்டத்தார் துதி

பேயன்ன புறச்சமயப் பிணக்குநூல்
வழியனைத்தும் பிழையேயன்றி
வாயன்மை தெளிந்துசைவ சித்தாந்த
வழிதேறி யதீதவாழ்வில்
போயண்மி யஞ்செழுத்துந் திருநீறுங்
கண்டிகையும் பொருளாக்கொண்ட
நாயன்மார் திருக்கூட்டம் பணிந்திறைஞ்சும்
பெரும்பேறு நான்பெற்றேனால். (௧)

(ப-ரை) பேயன்ன — (கண்டாரைத் தன் வயமாக்கும்) பேய் போன்ற, புறச்சமய — வெளிச்சமய, பிணக்கு நூல் வழி யனைத்தும்—மாறுபட்ட (கொள்கைகளையுடைய) சாஸ்திரமார்க்கங் கள் எல்லாம், பிழையே அன்றி—தவறுடையதே; அல்லாமலும், வாயன்மை தெளிந்து — பொருத்தமின்மையையும் அறிந்து, சைவசித்தாந்தவழி—சைவசித்தாந்தமாகிய (உண்மை) மார்க்கத்தை, தேறி—தெளிந்து, அதீத வாழ்வில் — மேலான வாழ்க்கையில், போயண்மி—போய்ச்சேர்ந்து, அஞ்செழுத்தும் — ஸ்ரீ பஞ்சாக்

காரத்தையும், திருநீறும்—விபூதியையும், கண்டிகையும் — உருத்திராக்கத்தையும், பொருளாகக்கொண்ட — (பயன்தரும்) உண்மைப் பொருளாகக் கைக்கொண்ட, நாயன்மார்-நாயன்மார்களின், திருக்கூட்டம்—சிறந்த குழாத்தை, பணிந்திறைஞ்சும்—தாழ்மையுடன் வணங்கும், பெரும்பேறு — பெரிய பாக்கியத்தை, நான்பெற்றேன் —(இப்பிறவியில்) நான் பெற்றுக்கொண்டேன். [ஆல்: அசை]

திருப்புகழ்.

ஏறுமயி லேறிவிளை யாடுமுக மொன்றே
ஈசருடன் ஞானமொழி பேசுமுக மொன்றே
கூறுமடி யார்கள்வினை தீர்க்குமுக மொன்றே
குன்றுருவ வேல்வாங்கி நின்றமுக மொன்றே
மாறுபடு சூரரை வதைத்தமுக மொன்றே
வள்ளியை மணம்புணர வந்தமுக மொன்றே
ஆறுமுக மானபொருள் நீயருளல் வேண்டும்
ஆதியரு ணாசல மமர்ந்தபெரு மாளே. (க)

(ப-ரை) ஆதி — புராதன க்ஷேத்திரமாகிய, அருணாசலம் — திருவண்ணாமலையின்கண், அமர்ந்த — எழுந்தருளியிருக்கின்ற, பெருமாளே — முருகப்பெருமானே, ஏறுமயில்—ஆண் மயில்மேல், ஏறி—ஆரோகணித்து, விளையாடும் — (குன்றுதோறும்) விளையாடுகின்ற, முகம் ஒன்று—திருமுகம் ஒன்றும், ஈசருடன் — சிவபெருமானுடன், ஞானமொழி—பிரணவச்சொல்லை, பேசும் முகம் ஒன்று —கூறும் திருமுகம் ஒன்றும், கூறும்-(தமது குறைகளை)சொல்லும், அடியார்கள் வினை —தொண்டர்களுடைய தீவினைகளை, தீர்க்கும் —ஒழிக்கின்ற, முகம் ஒன்று —திருமுகம் ஒன்றும், குன்று உருவ—(கிரௌஞ்சகிரி) மலை பிளக்கும்படி, வேல் வாங்கி—வேற்படையைச் செலுத்தி, நின்ற முகம் ஒன்று — நிலைபெற்ற திருமுகம் ஒன்றும், மாறுபடு — தன்னைப்பகைத்த, சூரரை — சூரபதுமன், சிங்கமுகன் முதலிய சூரர்களை, வதைத்த — கொன்ற, முகம் ஒன்றும் — திருமுகம் ஒன்றும், வள்ளியை — வள்ளிநாயகியை, மணம் புணர —

திருமணஞ்செய்யும்படி, வந்த முகம் ஒன்று — எழுந்தருளிய திருமுகம் ஒன்றுமாக, அறுமுகமான — ஆறு திருமுகங்களையுடைய, பொருள் நீ —மெய்ப்பொருளாகிய தேவரீர், அருளல் வேண்டும்— அனுக்கிரகஞ்செய்தருளல் வேண்டும்.

இருவினையின் மதிமயங்கித் திரியாதே
எழுநரகி லுழலுநெஞ்சுற் றலையாதே
பரமகுரு அருள்நினைந்திட் டுணர்வாலே
பரவுதரி சனையையென்றெற் கருள்வாயே
தெரிதமிழை யுதவுசங்கப் புலவோனே
சிவனருளு முருகசெம்பொற் கழலோனே
கருணைநெறி புரியுமன்பர்க் கெளியோனே
கனகசபை மருவுகந்தப் பெருமாளே. (உ)

(ப-ரை) இருவினையின் மதிமயங்கித் திரியாதே — நல்வினை காரணமாக வந்த இன்பத்திலும், தீவினை காரணமாக வந்த துன்பத்திலும் அழுந்தி அறிவிழந்து (நான்) அலையாமல், எழுநரகில் உழலும் நெஞ்சுற்று அலையாதே — ரௌரவ முதலாகச் சொல்லப்பட்ட எழுவிதமான நரகங்களிலே (நான் வீழ்ந்து) சுற்றித்திரியும்படிக்கான (தீமைசெய்ய நினைக்கின்ற) மனதையடைந்து திரியாமல், பரமகுரு அருள் நினைந்திட்டு உணர்வாலே — பரமாசிரியரது திருவருளைச் சிந்தித்து (அதனால் வந்த) ஞானத்தினால், பரவுதரிசனையையென்று எற்கருள்வாயே — துதித்தற்கரிய தெரிசனத்தை எக்காலத்தில் அடியேனுக்கு அனுக்கிரகம் செய்வீரோ, தெரிதமிழை உதவு சங்கப் புலவோனே — தமிழ் மொழியை அறியும்படி உதவிய சங்கப்புலவர்களுள் உருத்திரசன்மரென்னும் புலவராய் எழுந்தருளியவரே, சிவன் அருளும் முருக செம்பொற் கழலோனே — சிவபெருமான் அருளிய முருகப்பெருமானே! செவ்விய பொன்னாற் செய்த வீரக்கழலை யணிந்தருளியவரே, கருணைநெறி புரியுமன்பர்க்கெளியோனே — தம்மை வணங்கும் அன்பர்க்கு கிருபா மார்க்கத்தை அளித்தருளும் எளிமையுடையவரே, கனகசபை மருவு கந்தப் பெருமாளே—கனகசபையிலெழுந்தருளிய முருகக்கடவுளே,

மீனாக்ஷியம்மை பிள்ளைத்தமிழ்.

தொடுக்குங் கடவுட் பழம்பாடற்
றொடையின் பயனே நறைபழுத்த
துறைத்தீந் தமிழி னொழுகுநறுஞ்
சுவையே யகந்தைக் கிழங்கையகழ்ந்
தெடுக்குந் தொழும்ப ருளக்கோயிற்
கேற்றும் விளக்கே வளர்சிமய
இமயப் பொருப்பில் விளையாடும்
இளமென் பிடியே எறிதரங்கம்
உடுக்கும் புவனங் கடந்துநின்ற
வொருவன் றிருவுள் ளத்திலழகு
ஒழுக வெழுதிப் பார்த்திருக்கும்
உயிரோ வியமே மதுகரம்வாய்
மடுக்குங் குழற்கா டேந்துமிள
வஞ்சிக் கொடியே வருகவே
மலையத் துவசன் பெற்றபெரு
வாழ்வே வருக வருகவே. (க)

(ப—ரை) தொடுக்கும் கடவுள் — கடவுளால் கோவையாக மொழிந்தருளப்பெற்ற, பழம்பாடல் தொடையின்பயனே — பழமையான பாடல்களாகிய மாலைகளின் (அதாவது வேத சிவாகமங்களின்) உண்மைப்பொருளாக விளங்குபவளே, நறை பழுத்த துறைத் தீம் தமிழின் — தேன்போலும் (சுவை) மிகுந்ததும் (இலக்கண முதலிய) பலவரம்புகளை உடையதுமான இனிமை பொருந்திய தமிழ்மொழியின் கண், ஒழுகும் நறும் சுவையே—ஊற்றெடுத்து ஓடும் நல்ல மதுரமே, அகந்தைக் கிழங்கை — நான் என்னும் செருக்குக்கு மூலமாகவுள்ள ஆணவ மலத்தை, அகழ்ந்து எடுக்கும்—தோண்டி எடுக்கப்பெற்ற(அறவே களைந்துள்ள), தொழும்பர் உளக்கோயிற்கு — அடியார்களது மனமாகிய கோயிலின்கண், ஏற்றும் விளக்கே — ஏற்றி வைக்கப்படும் விளக்காகத் திகழ்பவளே,

வளர் சிமய — ஓங்கிய உச்சிகளையுடைய, இமயப்பொருப்பில் — இமய மலையின்கண், விளையாடும் இளமென்பிடியே—விளையாடலைச் செய்யும் இளம் பெண்யானை போன்றவளே, எறிதரங்கம் உடுக்கும் — அலைவீசும் கடல்களால் சூழப்பெற்றுள்ள, புவனம் கடந்து நின்ற ஒருவன் — உலகங்களைக் கடந்து (அவற்றிற்கு அதீதமாய்) நிற்கும் ஒப்பற்ற சிவபெருமான், திருவுள்ளத்தில் அழகு ஒழுக—தமது திரு உள்ளத்தில் அழகு ஊற்றெடுத்து ஓடாநிற்ப, எழுதிப்பார்த்து இருக்கும் உயிர் ஓவியமே — வரைந்துகொண்டு இடைவிடாது நோக்கிக்கொண்டிருக்கும் உயிருள்ள சித்திரம் போல்பவளே, மதுகரம் வாய் மடுக்கும் — வண்டுகள் (தேனை) உண்ணும், குழல்காடு ஏந்தும் — கூந்தலா பாரத்தை தாங்கும், இளவஞ்சிக்கொடியே வருகவே—இளமையான வஞ்சிக்கொடிபோன்ற மீனாக்ஷியம்மையே! எழுந்தருளுவாயாக, மலயத்துவசன் பெற்ற பெருவாழ்வே வருக வருகவே—மலையத்துவச பாண்டியன் அருமையாகப் பெற்றெடுத்த பெரும்பாக்கியமே எழுந்தருளுவாயாக, எழுந்தருளுவாயாக.

பெருந்தே னிறைக்கு நறைக்கூந்தற்
பிடியே வருக, முழுஞானப்
பெருக்கே வருக, பிறைமௌலிப்
பெம்மான் முக்கட் சுடர்க்கிடுநல்
விருந்தே வருக, மும்முதற்கும்
வித்தே வருக, வித்தின்றி
விளைக்கும் பரமா னந்தத்தின்
விளைவே வருக, பழமறையின்
குருந்தே வருக, வருள்பழுத்த
கொம்பே வருக, திருக்கடைக்கண்
கொழித்த கருணைப் பெருவெள்ளம்
குடைவார் பிறவிப் பெரும்பிணிக்கோர்
மருந்தே வருக, பசுங்குதலை
மழலைக் கிளியே வருகவே,
மலயத் துவசன் பெற்றபெரு
வாழ்வே வருக வருகவே. (உ)

(ப-ரை) பெருந்தேன் இறைக்கும் — மிக்க தேனைப்பொழி கின்ற, நறைக்கூந்தற்பிடியே வருக — வாசனைபொருந்திய குழலை யுடைய பெண் யானை போன்றவளே (என் முன்) எழுந்தருளு வாயாக, முழுஞானப்பெருக்கே வருக — பூரணமாக நிறைந்த ஞானவெள்ளமே வருவாயாக, பிறைமௌலிப் பெம்மான் — மூன் ரும் பிறைச்சந்திரனை மகுடமாகத் தரித்துள்ள பெருமானுகிய, முக்கண் சுடர்க்கு இடு நல் விருந்தே வருக — மூன்று கண்களை யுடைய ஒளிமிக்க சிவபெருமானுக்கு புதுமையாக அளிக்கப்பெறும் அமுதம் போன்றவளே வருவாயாக, மும்முதற்கும்வித்தே வருக— அயன் மால் உருத்திரன் என்னும் மூன்று கர்த்தர்களையும் தோற்று விப்பவளே வருவாயாக, வித்து இன்றி விளைக்கும் பரம ஆனந்தத் தின் விளைவே வருக — வேறு காரணமின்றி (தானே) தோற்று விக்கப்பெறும் மேலான ஆனந்தத்தின் முதிர்ச்சியாயிருப்பவளே வருவாயாக, பழமறையின் குருந்தே வருக — பழமையான வேதங் களின் கொழுந்தாகவுள்ளவளே வருவாயாக, அருள் பழுத்த கொம்பே வருக—(ஆன்மாக்கள்மீது) கருணைமுதிர்ந்த பூங்கொம்பு போன்றவளே வருவாயாக, திருக்கடைக்கண் கொழித்த கருணைப் பெருவெள்ளம் — அழகிய கடைக்கண்ணினின்றும் பொழிந்த கருணையாகிய பெரிய வெள்ளத்தில், குடைவார் பிறவிப் பெரும் பிணிக்கு — மூழ்குபவர்களின் பிறவியாகிய பெரும் நோய்க்கு, ஓர் மருந்தே வருக — ஒப்பற்ற மருந்தாக உள்ளவளே வருவாயாக, பசுங்குதலை மழலைக் கிளியே வருகவே—மழலைச்சொற்களையுடைய பச்சைக்கிளி போன்றவளே வருவாயாக, மலயத்துவசன் பெற்ற பெருவாழ்வே வருக வருகவே —மலயத்துவசபாண்டியன் அருமை யாகப் பெற்றுள்ள (ஆன்மாக்கட்குப்) பெரும்பாக்கியமாக விளங்கும் அம்மையே வருவாயாக! வருவாயாக!

தாயுமானவர் பாடல்

இனியே தெமக்குனருள் வருமோ? வெனக்கருதி
ஏங்குதே நெஞ்சமையோ!
இன்றைக் கிருந்தாரை நாளைக்கிருப்பரென்
றெண்ணவோ திடமில்லையே!
அநியாய மாயிந்த வுடலைநா னென்றுவரு
மந்தகற் காளாகவோ?
ஆடித்திரிந்து நான் கற்றதுங் கேட்டது
மவலமாய்ப் போதனன்றே?
கனியேனும் வறியசெங் காயேனு முதிர்சருகு
கந்தமூ லங்களேனும்
கனல்வாதை வந்தெய்தி னள்ளிப் புசித்துநான்
கண்மூடி மௌனியாகித்
தனியேயிருப்பதற் கெண்ணினே னெண்ணமிது
சாமிநீ யறியாததோ
சர்வபரி பூரண வகண்டதத் துவமான
சச்சிதானந்த சிவமே!

(ப-ரை) எமக்கு — எனக்கு, இனி உன் அருள் ஏது — உன் கிருபை கிடைப்பதேது? வருமோ—ஒருக்கால் உண்டாகுமோ, எனக்கருதி—என்று நினைத்து, நெஞ்சம் ஏங்குதே — மனமானது ஏக்கங்கொள்ளா நின்றதே, ஐயோ—அந்தோ! இன்றைக்கு இருந்தாரை — இன்று உயிர்வாழ்ந்திருப்பவரை, நாளைக்கு இருப்பர் என்று எண்ணவோ — நாளைக்கு உயிர் வாழ்ந்திருப்பார்களென்று நினைக்கவோ, திடம் இல்லையே—திண்மையாக எண்ணக்கூடியதாக இல்லையே, அநியாயமாய்—அநீதியாய், இந்த உடலை—இந்தச்சரீரத்தினைக்குறித்து, நான் என்று வரும் — நான் என்று அகங்கரித்துக் கொண்டு வருகின்ற, அந்தகற்கு ஆளாகவோ — நமனுக்கு அடிமையாகவோ? நான் ஆடித்திரிந்து — நான் ஆடி உழன்று, கற்றதும் கேட்டதும்— கற்ற நூல்களும் கேட்ட கேள்வியும், அவலமாய்ப் போதல் நன்றே—நிஷ்பலமாய்ப் போதல் நன்மையோ? கனி ஏனும்

— கனியாயினும், வறிய செங்காய் எனும் — வெறுமையான — செங்காய்களையாயினும், உதிர்சருகு கந்தமூலங்கள் எனும் — உதிர்ந்த சருகு, கிழங்குகளையாயினும், கனல்வாதை வந்து எய்தின் — பசியின் கொடுமை வந்து பொருந்தினல், அள்ளிப்புசித்து — வாரியுண்டு, நான் — அடியேன், கண்மூடி — கண்களை மூடிக் கொண்டு, மௌனி ஆகி — மௌன நிலையை யுடையேனுகி, தனியே இருப்பதற்கு எண்ணினேன்—தனியாயிருக்க நினைத்தேன், இது எண்ணம்—இந்த எண்ணமானது, சாமி நீ அறியாததோ — (எங்கும் நிறைந்த) சுவாமியே நீயறியாததோ? சர்வ பரிபூரண — சகல பதார்த்தங்களிலும் நிறைந்துள்ள, அகண்ட தத்துவமான — வியாபகப்பொருளாகிய, சச்சிதானந்த சிவமே! — உண்மையறிவானந்த ரூபமாகிய மங்கள வஸ்துவே!.

சிவஞான சுவாமிகள் பாடல்

சிவனெனு மொழியைக் கொடியசண்டாளன்
  செப்பிடி னவனுட னுறைக
அவனொடு கலந்துபேசுக வவனே
  டருகிருந் துண்ணுக வென்னும்
உவமையில் சுருதிப் பொருடனை நம்பா
  வூமரோ டுடன்பயில் கொடியோன்
இவனெனக் கழித்தா லையனே கதிவே
  றெனக்கிலை கலைசையாண் டகையே (க)

(ப-ரை) சிவன் எனும் மொழியைக் — சிவன் என்று கூறப்படும் (மகா மந்திரமாகிய) சொல்லை, கொடிய சண்டாளன் — (பொய், கொலை, களவு முதலியன செய்யும்) கொடுமையுடைய சண்டாளனுகிய ஒருவன், செப்பிடின் — (பக்தியுடன்) சொல்லுவானுயின், அவனுடன் உறைக-அவனுடன் கூடியிருக்க, அவனேடு கலந்து பேசுக —அவனேடு கலந்து உரையாடுக, அவனொடு அருகு இருந்து உண்ணுக—அவனுக்குச் சமீபத்திலிருந்து உணவருந்துக, என்னும் — என்று கூறுகின்ற, உவமையில் சுருதிப்பொருள்தனை

நம்பா — உவமையற்ற வேதத்தின் பொருளில் நம்பிக்கையில்லாத, ஊமரோடு — (கோத்திரத்தையும் குலத்தையுமே பொருளாகக் கொண்டு மேலே கூறிய சுருதிக்கு யாதுபொருள் என வினவிய காலத்து) ஊமைகள் போல் யாதும் பேசாதிருக்கிறவர்களோடு, உடன் பயில் கொடியோன் இவன்—சேர்ந்து பழகிக்கொண்டிருக்கிற கொடுமையுடையவன் இவன் என்று, கழித்தால் – (அடியேனை தேவரீர் அடியார் கூட்டங்களினின்றும்) கழித்து விடுவதானல், ஐயனே கலைசை ஆண்தகையே—எமது தலைவனே! கலைசைப்பதியில் எழுந்தருளியிருக்கும் பெருமானே! கதிவேறு எனக்கிலை —(அடியேனுக்குப்) பற்றுக்கோடாவார் உன்னைத்தவிர வேறு யாருமில்லை.

திருமந்திரம்

யாவர்க்குமா மிறைவர்க் கொரு பச்சிலை
யாவர்க்குமாம் பசுவிற்கொரு வாயுறை
யாவர்க்குமா முண்ணும் போதொரு கைப்பிடி
யாவர்க்குமாம் பிறர்க்கின்னுரை தானே.

(ப-ரை) யாவர்க்குமாம் இறைவர்க்கு ஒரு பச்சிலை — (யாதேனும் ஒரு பச்சிலையைக்கிள்ளிப் பக்தியோடு அருச்சித்தாலும் இறைவன் அன்போடு ஏற்றுக்கொள்கின்றுனுனதால்) இறைவர்க்கு ஒரு பச்சிலையைக்கிள்ளி அர்ச்சனை செய்தல் (எத்தகைய ஆற்றல் குறைந்தவர்கட்கும்) கூடும், யாவர்க்கும் ஆம் பசுவிற்கு ஒரு வாயுறை — பசுவிற்கு ஒரு பிடி புல்லை வாயிற்கொடுத்தலாகிய புண்ணியம் செய்தல் எத்தகைய ஆற்றல் குறைந்தவர்கட்கும் கூடும். யாவர்க்கும் ஆம் உண்ணும்போது ஒரு கைப்பிடி —தாம் உணவருந்தும்போது ஒரு கவளம் அன்னத்தை (இரப்போர்கட்கு இடுதல்) எத்தகைய எளியவர்கட்கும் கூடும், யாவர்க்கும் ஆம் ஒரு இன்னுரை தானே — (வறியோர்கட்குத் தம்மால் வழங்கக்கூடியது யாதும் இல்லையாயினும்) இனிமையான ஒரு சொல்லையாவது அவரிடங் கூறுதல் யாவர்க்கும் செய்யத்தக்கது ஆகும்.

திருச்சிற்றம்பலம்